கண் வைத்திய நிபுணர்கள் பரிசோதனை செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.



பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00



OPTICIANS
SIGHT TESTET
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.



சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 02 ஞாயிற்றுக்கிழமை (18 09 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 295


# ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 9 ஆம் திகதி
# வேட்புமனு அடுத்த மாதம் 7 ஆம் திகதி ஏற்பு

## ஆணையாளர் பிரகடனம்

கொழும்பு, செப்ரெம்பர் 18

ஸ்ரீலங்காவில் நிறைவேற்று அதிகாரமுடைய புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான — மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல்— எதிர்வரும் நவம்பர் 9 ஆம் திகதி நடைபெறும். இத்தேர்தலுக்கான வேட்புமனுக்கள் அடுத்த மாதம் 7 ஆம் திகதி ஏற்றுக் கொள்ளப் படும்.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா இத்தேர்தல் தொடர்பான பிரகடனத்தை நேற்று வெளியிட்டார்.

கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுரத்தில் உள்ள தேர்தல் செயலகத்தில் நவம்பர் 7 ஆம் திகதி காலை 9 மணிக்கும் முற்பகல் 11 மணிக்கும் இடையில் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்சேபனைகள் தெரிவிப்பதற்கு அன்றைய தினம் மேலதிகமாக அரைமணி நேரம் வழங்கப்படும்.

ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் எட்டாவது விதியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் வேட்பாளர் 50 ஆயிரம் ரூபாவையும், ஏனைய வேட்பாளர்கள் 75 ஆயிரம் ரூபாவையும் கட்டுப் பணமாகச் செலுத்த வேண்டும்.

நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் தினத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முனி



காமினியார் இப்போதிருந்தே ஏதாவது தில்லு முல்லுகளுக்கு யோசனை போடுவார் பாருங்கோ...!

## பிரதமரின் பத்திரிகை செயலாளர்

கொழும்பு, செப். 18

பிரதமர் சந்திரிகாவின் பத்திரிகைச் செயலாளராக பிரபல பத்திரிகையாளர் திரு. ஆரியசிறி நியமிக்கப்பட்டிருக்கிறார். பல செய்திப் பத்திரிகைகளில் இவர் கடமையாற்றியுள்ளார்

[ஐ-ஏ]

## சந்திரிகா-காமினி இடையே தேர்தலில் நேரடிப் போட்டி

### ஒஸியுடன் ரேலோ வேட்பாளரும் களத்தில்?

கொழும்பு, செப். 18

நவம்பர் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளரான பிரதமர் சந்திரிகா குமாரதுங்கவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரான எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸநாயக்காவுக்கும் இடையில் நேரடிப் போட்டி நிலவும் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐ. தே. க. பட்டியலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்குத் தெரிவான — ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் அணி பிரிவுத் தலைவரான— ஒஸி அபேகுணசேகராவும் இத்தேர்தலில் குதிக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. க. வேட்பாளராக காமினி திஸநாயக்கா போட்டியிடுவதை தாம் கடுமையாக எதிர்ப்பதாகவும்—

ஐ. தே. க தனது வேட்பாளராக காமினியை நிறுத்தினால் அவருக்கு எதிராகத் தாம் தேர்தல் களத்தில் குதிக்கப்போவதாகவும்—

ஒஸி அபேகுணசேகரா அறிவித்திருப்பது தெரிந்ததே.

இதேவேளை தமிழ்க்கட்சியான ரெலோவும் ஜனாதிபதித் தேர்தலில் தனது வேட்பாளரை நிறுத்த முயற்சித்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த வாரம் வழக்குத் தாக்கல்

கொழும்பு, செப். 17

எம்பிலிப்பிட்டியவில் காணாமற்போன 31 மாணவர்களை கடத்திச் சென்ற குற்றச்சாட்டின் பேரில் 13 சந்தேகநபருக்கு எதிராக இரத்தினபுரி நீதிமன்றத்தில் அடுத்த வாரம் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (ஐ-6)

## ஜே. ஆருக்கு 88 வயது

கொழும்பு, செப். 18

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா நேற்று தமது 88 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.

(அ)

## வீதி விபத்துகளில் ஐவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 18

யாழ் நகரில் ஆஸ்பத்திரி வீதிச் சந்திக்கு அருகில் நேற்று மாலை இடம்பெற்ற ஆட்டோ—மோட்டார் சைக்கிள் விபத்தில் நால்வர் காயமடைந்தனர்.

ஆட்டோவில் பயணம் செய்த மானிப்பாயைச் சேர்ந்த இ. மகேஸ்வரி (வயது 64) அவரது மகளான இ. ஸ்ரீ நாதன் (வயது 28) ஆட்டோ சாரதியான ... (வயது 20) மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்த கொழும்புத்துறையைச் சேர்ந்த யேசுதாசன் சூரியதாஸ் (வயது 39) ஆகியோரே காயமடைந்தனர்.

இதற்கிடையில் நகரில் இடம்பெற்ற மற்றொரு மோட்டார் சைக்கிள் விபத்தில் சாவகச்சேரியைச் சேர்ந்த ரி. இளங்கரட்ணம் (வயது 36) என்பவர் படுகாயமடைந்தார்

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (ஐ-15)

## பருத்தித்துறை கடலில் அழிக்கப்பட்ட
## சுப்பர் டோறாவில் இருந்த 12 கடற்படையினர் எங்கே?

### விசாரணை நடத்த பெற்றோர் கோரிக்கை

கொழும்பு, செப் 18

கடந்த ஆண்டு ஓகஸ்ட் 29 இல் பருத்தித்துறைக் கடலில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் அழிந்து போன "சுப்பர் டோறா 464" கப்பலில் இருந்த 12 கடற்படை வீரர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிக்கண்டு பிடிக்க விசாரணை நடத்தும் படி அப்படையினரின் பெற்றோர்கள் பிரதமர் சந்திரிகாவை மகஜர் மூலம் கோரியுள்ளனர்.

"சுப்பர் டோறா" கப்பலின் கட்டளைத் தளபதி லெப்டினன்ட் ஏ. பி. விமலவீரா உட்பட பன்னிரண்டு படையினர் அத்தாக்குதலில் காணாமற்போய்விட்டனர் என்று கடற்படை கொமாண்டர், காணாமற்போன படையினரின் பெற்றோர்களுக்கு அறிவித்துள்ளார்.

காணாமற்போன படையினரை விடுதலைப் புலிகள் சிறைக்கைதிகளாக எடுத்துச் சென்றுள்ளனரா அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி விசாரணை நடத்த ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும்படியும் பெற்றோர்கள் அம்மகஜரில் கோரியுள்ளனர்.

மகஜரின் பிரதி ஒன்று பாதுகாப்புப் பிரதி அமைச்சருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

(ஐ-எ)

## பூநகரியை கைவிடுவதற்கு படை அதிகாரிகள் எதிர்ப்பு

### ஐலண்ட் பத்திரிகை தகவல்

பூநகரி இராணுவ முகாமில் இருந்து படையினர் வெளியேறுவதை பாதுகாப்புப் படை அதிகாரிகள் எதிர்ப்பதாக 'த ஐலண்ட்' நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

பூநகரியில் இருந்து இராணுவம் வெளியேறக்கூடாது என்று அதிகாரிகள் நம்புவதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரி இராணுவ முகாமை மூடிவிட வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசைக் கேட்டுள்ளதாகவும் ஐலண்ட் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரியை வைத்திருப்பதா அல்லது கைவிடுவதா என்பது குறித்து நாம் இன்னும் விவாதிக்கக்கூட இல்லை என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சாத்தியம் பற்றி ஆராயவதில் தவறேதும் இல்லை. எனினும் இராணுவ நிலைகள் மற்றும் முகாம்களை மூடிவிடுவது அல்லது விடுதலைப் புலிகளின் நியாயமற்ற கோரிக்கைகளுக்கு இணங்குவது ஆகியவற்றுக்கு படையினர் எதிர்ப்பாகவுள்ளனர் என்றும் ஐலண்ட் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஐ-எ)

## புல்மோட்டையில் தாக்குதல் படையினரில் இருவர் பலி!

### ஆயுதங்களும் மீட்பு!!

யாழ்ப்பாணம், செப். 18

திருமலை மாவட்டம் புல்மோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 5.30மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவத்தினர் இருவர் கொல்லப்பட்டனர்.

புல்மோட்டை 10 ஆம் கட்டைக்கும், 7 ஆம் கட்டைக்கும் இடையே ரோந்து சென்ற படையினர் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டது

இந்தத் தாக்குதலில் படையினரிடமிருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்கள் வருமாறு:-

★ ரீ-56 துப்பாக்கி — 02
★ அவற்றுக்குரிய மகஸின் — 08
★ மகஸின் ஹோல்சர் — 02
★ ஜே. ஆர். கிரனேட் — 02
★ தமுத்தர ரவை — 235

[ஐ 4]

## டாக்டர் பொன்னம்பலத்தை இந்த மண்என்றும் மறக்காது

### விடுதலைப்புலிகள் இரங்கல் செய்தி

யாழ்ப்பாணம், செப். 18

டாக்டர் பொன்னம்பலம் சேவை மூப்படைந்த போதும் தனது நோயையும் பொருட்படுத்தாது செய்த மருத்துவப் பணியை இந்தமண் என்றும் மறக்கமாட்டாது.

வைத்திய கலாநிதி பொன்னம்பலம் அவர்களின் மறைவை ஒட்டி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் தேற்றுவித்த இரங்கல் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல சத்திர சிகிச்சை நிபுணரும் சேவை மனப்பான்மை கொண்ட மருத்துவருமான வைத்திய கலாநிதி பொன்னம்பலம் அவர்களின் கொழும்பில் இயற்கை எய்திய செய்தி தமிழ் மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது

1976 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் யாழ் மருத்துவமனைக்கு மாற்றலாகி வந்து சேவையாற்றத் தொடங்கிய அவர் இவ் ஆண்டின் முற்பகுதியில் சுகயீனம் காரணமாக கொழும்பு செல்லும்வரை தொடர்ச்சியாக 18 ஆண்டுகள் தமிழ் மக்களுக்கு மருத்துவ சேவை புரிந்துள்ளார்.

நெருக்கடியான கால கட்டங்களில் எல்லாம் யாழ். மருத்துவமனையிலேயே தங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திலீபனின் அஞ்சலி நிகழ்வில் மக்கள் உணர்வுடன் பங்கேற்பு

யாழ்ப்பாணம், செப். 18

ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து சாகும் வரை உண்ணாவிரதமிருந்து ஈகைச் சாவடைந்த தியாகி திலீபனின் அஞ்சலிநிகழ்ச்சிகள் குடாநாட்டில் நேற்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்றன.

நல்லூரில் நேற்று நடந்த அடையாள உண்ணாவிரதத்தில் யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச வணிகர்கள், வணிக ஊழியர்கள், நகைத்தொழிலாளர்கள் மற்றும் சனசமூக நிலையங்களைச் சேர்ந்தோர் கலந்து கொண்டனர். இவர்கள் யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் நேற்று முழு நாளும் மூடப்பட்டிருந்தன.

திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்திப்பவனி ஒன்றும் நேற்றுக்காலை நடைபெற்றது. யாழ் வணிகர் கழகப் பணிமனையில் இருந்து காலை 6.30 மணிக்கு ஆரம்பமான இந்த ஊர்திப் பவனி நல்லூர் பகுதிவரை இடம் பெற்றது.

வடமராட்சி பகுதியில் உள்ள இடங்களில் அஞ்சலி நிகழ்வு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்பு திருத்தம் பற்றி ஆராய்வதற்கு தெரிவுக்குழு

### கட்சித் தலைவர்கள் கூடித் தீர்மானம்

கொழும்பு, செப். 17

அரசமைப்புத் திருத்தம் பற்றி ஆராய்ந்து தேவையான சிபார்சுகளைச் செய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிப்பது என அரசியல் கட்சித் தலைவர்கள் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர்.

கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச்சு
## அரச பிரதிநிதி வருகை தாமதம்

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்த ஸ்ரீலங்கா அரச பிரதிநிதி ஒருவர் இரண்டொரு வாரங்களில் யாழ்ப்பாணம் வரவுள்ளார் என ஸ்ரீலங்கா அரச பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஒரு நாட்களில் அவர் யாழ்ப்பாணம் விஜயம் செய்ய ஏற்பாடகியிருந்தது என்றும் -

இருந்த நேரத்தில் பல்வேறு காரணங்களை முன்னிட்டு அவரது பயணம் ஓரிரண்டு வாரங்களுக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## பட்டதாரிகளுக்கு பயிலுநர் ஆசிரியர் நியமனம் இல்லை

கொழும்பு, செப். 18

பட்டதாரிகளை பயிலுநர் ஆசிரியர்களாக நியமிப்பதை நிறுத்துவது என கல்வி, உயர் கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் சங்கத் தூதுக்குழுவினருடன் அமைச்சர் ரிச்சர்ட் பதிரான நடத்திய பேச்சுவார்த்தையின் முடிவில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

பயிலுநர் ஆசிரியர்களாகத் தாங்கள் நியமிக்கப்பட்டமை ஒரே காரணத்துக்காகத் தங்களுக்கு ஏனைய ... இடைக்கும் ... ளும் அலவன்ஸ்களும் மறுக்கப்படுவதாக தூதுக்குழுவினர் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

பட்டதாரி ஆசிரியரின் மாதச் சம்பளம் 4 ஆயிரத்து 20 ரூபாவாக இருக்க, பட்டதாரி பயிலுநர் ஆசிரியருக்கு மாதம் 2ஆயிரத்து 550ரூபாவே வழங்கப்படுவதாகவும் அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டது

பயிலுநர் ஆசிரியராக நியமனம் செய்யப்பட்ட திகதியில் இருந்து தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படியும் ...

## உலக வங்கி கூட்டத்துக்கு செல்ல பிரதமர் விருப்பம்

கொழும்பு, செப். 18

அடுத்தமாதம் முதல்வாரத்தில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள உலகவங்கியின் சர்வதேச நாணய நிதியத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா விருப்பம் தெரிவித்துள்ளார்.

தகவலறிந்த வட்டாரங்கள் இதனைத் தெரிவித்ததாக வெளிநாட்டுச் சிங்கள சேவையில் அறிவிக்கப்பட்டது.

அடுத்த மாதம் ஜனாதிபதி தேர்தலுக்கான நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்யவேண்டியுள்ளதால் பிரதமர் சந்திரிகா அங்கு செல்ல முடியாதிருக்கும் என பிரதமருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

(ஐ-6)

## சந்திரிகாவின் முயற்சிகளுக்கு
## வெளிநாட்டு தூதரக அதிகாரிகள் பாராட்டு

கொழும்பு, செப். 18

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பிரதமர் சந்திரிகா எடுத்து வரும் முயற்சிகளை கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள் பாராட்டியுள்ளனர்.

அவரது இந்த வழிமுறைகள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுமாயின் 11 வருடகாலமாக நடைபெற்று வரும் கொடூர யுத்தம் முடிவுக்கு வரலாம் என்றும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# G. C. C.

## வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்

514/14, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(பழைய O. P. Dக்கு முன்பாக)

கண், காது, மூக்கு, தொண்டை (ENT), முறிவு, மகப்பேறு, சத்திர சிகிச்சை, சிறுபிள்ளைகளுக்குரிய வைத்தியம், சருமநோய்கள் என்பவற்றிற்கு விசேட வைத்திய நிபுணர்களினால் ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றது. இத்துடன் மருத்துவ ஆய்வுகூட சேவைகளும் (E. C. G) இங்கு நடைபெறுகின்றன.

- நிர்வாகி

[32921]



## உடுவில் மகளிர் கல்லூரி
## பட்டப்படிப்புகள் பிரிவு

# G. A. Q. - 95

யாழ்ப்பாணம் / பேராதனை

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன

## ENGLISH - LITERATURE

ஆரம்பம்: 01 - 10 - 1994
3 மணி

— பதிவாளர்.

[இ-9141]


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வீர ஜனனம்: 07 — 08 — 1976

வீர மரணம்: 18 — 09 — 1992

### இராமச்சந்திரன் கோணேஸ்
(வீரவேங்கை நாகமுத்து)
(சில்லாலை றோ. க. த. க. பாடசாலை மாணவன்)


குலக்கொழுந்தே கோமானே கோணேசா—நம்
தமிழீழம், நிலம் ஓங்க, இனம்வாழ அகன்றனையோ!
எம் உறவோடு உறவாகி உடலாகி நின்றோனே
எம் அறம் என்றபோதிலே நீ—இனம்வாழ ஏகினையோ!
எம்மோடு உடலங்கி மனமாகி இருந்தாயே
எம் சோகம் அறியாது எமைவிட்டு ஏகினையோ!
நான் தந்தையுமில்லை; நான் தாயும் இல்லை;
நான் உன் அண்ணன் இல்லை; நான் உன்-
அக்கா இல்லை

நாம் ஏன் உன் பிரிவால் உருகுகிறோம்
என் நீ அறிவாயா?

உனது பிரிவால் துயருறும்!
என்றும் மறவாத!
பி. கபிரியேல் பிள்ளை, மணி,
கௌரி. நிமலன்

"றோசவனம்"
சில்லாலை,
பண்டத்தரிப்பு.

(7914]





எமது மண்ணில் நற்பெயர் பெற்றது

றோயல் றோஸ்
ரால்கம்பவுடர்

- நறுமணமிக்கது
- சுகாதாரமிக்கது
- புத்துணர்ச்சியானது
- அனைவராலும் விரும்பதக்கது
- விலை மலிவானது

தீபா றோஸ்
ரால்கம்பவுடர்

அழகிய கொள்கலன்களில் அற்புத
தயாரிப்பாக விற்பனையிலுள்ளது

றோயல் இன்டஸ்றீஸ்
பொன்னையா லேன்,
வண்ணார்பண்ணை வடமேற்கு,
ஆனைக்கோட்டை

(சி-8594)


திலீபன் நினைவாக

# இன்று நடைபெறும் உண்ணாவிரத நிகழ்வுகள்

தியாகி திலீபன் நினைவாக இன்று ஞாயிற்றுக்கிழமை பல்வேறு வட்டங்களில் உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளும் பொது அமைப்புகளும் நிறுவனங்களும் வருமாறு:

பருத்தித்துறையில் மந்திகை அம்மன் கோயிலடி பருத்தித்துறை ப. நோ. கூ. ச.

கரவெட்டியில் துன்னாலை கலிகைக் கந்தசுவாமி கோயில் சதா பொன்ன் கல்வி நிறுவனம், நெல்லியடி தொழிலாளர் சங்கம்.

உடுப்பிட்டியில் நாவலடி வைரவர் கோயிலடி பீக்கொம் தனியார் கல்வி நிறுவனம், வல்வெட்டி ச. ச. நிலையம், தர்மகுலசிங்கம், ச. ச. நிலையம், கருணாநிதி ச. ச. நிலையம், தென்னவன் ச. ச நி. அச்சுவேலி சிற்றூர் மக்கள்

உடுவிலில் சுன்னாகம் ச. ச. நி., ராஜரூபன் ச. ச. நி. சுன்னாகம் மாதிரிக் குடியிருப்பு.

சங்கானையில் வலி மேற்கு வர்த்தகர் சங்கம்.

சண்டிலிப்பாயில் சண்டிலிப்பாய் சிற்றூர் மக்கள்,

கோப்பாயில் கோப்பாய் ம. வி. சரவண பவானந்தா, கல்லூரி, கோப்பாய் தெற்கு ஆர். சி பாடசாலை, பூநகர் மடம் ஆ. த. க. பாடசாலை, கோப்பாய் தையல் நிலையம், தெ. ப. பொ. கூ, ச. ச. ச. நிலையங்கள்

தீவகம் கோட்டத்தில் வேலணை ப. நோ. கூ. ச. யாழ். முஸ்லிம் பகுதி

தென்மராட்சி கைதடியில் குமாரநகர் ச. ச. நி. உதயசூரியன் ச. ச. நி

சாவகச்சேரியில் சாவாநகர், வணிகர் மன்றம்

கொடிகாமத்தில் நாவலர் ச. ச. நி.. வர்த்தகர் சங்கம், தெ. ப. பொ. கூ. ச., ப. நோ. கூ. ச. கொடிகாமம்.

பளையில் வேபொடு கேணி கச்சாய் வெளி மக்கள், தென்னந்தோட்ட ஊழியர். (ஈ)

# மற்றொரு ஒற்றுக்கேட்கும் நிலையம் கண்டு பிடிப்பு

கொழும்பு, செப். 18

அமைச்சர்கள் மற்றும் எம். பிக்களின் தொலைபேசி உரையாடல்களை ஒற்றுக்கேட்கும் இரண்டாவது நிலையம் பற்றி தபால், தொலைத்தொடர்பு அமைச்சுக்குத் தகவல் கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

முதலாவது ஒற்றுக்கேட்கும் நிலையம் கொழும்பு கேம்பிரிட்ஜ்பிளேஸில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டு ரெலிகொம் நிறுவன அதிகாரிகளால் செயலிழக்கச் செய்யப்பட்டது தெரிந்ததே.

தற்போது இரண்டாவது ஒற்றுக்கேட்டும் நிலையம் கொழும்புக்கு அருகில் இயங்குவதாகத் தகவல் கிடைத்துள்ளது

அந்த நிலையத்தைக் கண்டு பிடித்து செயலிழக்கச் செய்யும்படி அமைச்சர் மங்கள சமரவீர ரெலிகொம் நிறுவனத்துக்கு உத்தரவிட்டிருக்கிறார். (இ-6)

# அகதி முகாமில் மலேரியா

அரியாலையில் உள்ள டபஸ் இடம்பெயர்ந்தோர் அகதி முகாமில் மலேரியா காய்ச்சல் பரவி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இம்முகாமில் ஏற்பட்ட சுகாதார சீர்கேட்டினாலேயே மலேரியா பரவி வருவதாக தெரிவிக்கப்பட்டது. மலேரியாவை கட்டுப்படுத்துவதற்கு யாழ் மாநகர சுகாதார பகுதி துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. (இ-17)

## புலிகளின் குரல் வானொலியில்

18 — 09 — 1994
ஞாயிறு இரவு

- ★ 8.01 — தியாக தீபம் லெப் கேணல் திலீபன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — ஞானரதன் எழுதிய — "திலீபன்"
- ★ 8.20 — திலீபன் நினைவாக பாடல்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தொடர்நாடகம் —பொன். கணேசமூர்த்தி எழுதும் இலங்கைமன் - 40 ஆம் அங்கம்

19 — 09 — 1994
திங்கள் காலை

- ★ 7-02—மாவீர வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30—செய்திகள்
- ★ 7-35—பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 - தியாகதீபம் திலீபன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — இயல்வாணன் எழுதிய "உன்னதமான வொன்றின் பதிவுகளை மீட்டல்"

## உடுவில் வாழ்வகம் ஆண்டு விழா

யாழ்ப்பாணம், செப். 18

உடுவிலில் உள்ள விழிப்புலனிழந்தோர் வாழ்வகத்தின் 6 ஆவது ஆண்டு விழா மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறும்.

வாழ்வகத் தலைவர் செல்வி ஆ. சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும் விழாவில் துர்க்கா தேவஸ்தானத் தலைவர் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, மனித முன்னேற்ற நடு நிலைய இயக்குநர் அருட் தந்தை சில்வி ஜெபநேசன் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவார்கள்.

யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

# சித்தாந்தத்தை சைவத்திலிருந்து பிரித்துக்காட்டுவது அர்த்தமற்றது

## இந்து சமயப் பேரவை அறிக்கை

கடந்தமாதம் நடைபெற்ற சைவ சித்தாந்த ஆய்வு வட்டத்தின் 5ஆம் ஆண்டு நிறைவு வைபவத்தில் திருமறைக் கலாமன்ற இயக்குநர் வண. நீ. மரிய சேவியர் அடிகள் ஆற்றிய உரை, "தமிழர்களின் பாரம்பரிய சொத்துகளில் சித்தாந்தம் முதன்மையானதாகும்" என்ற தலைப்பில் 19-08-94 உதயனில் வெளியானது.

அதற்குப் பதிலளிக்கும் விதத்தில் யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை வெளியிட்ட அறிக்கை இதுவாகும்.

திருமறைக் கலாமன்றம் சைவசித்தாந்த ஆய்வு வட்டத்தின் 5 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் சைவ சித்தாந்தம், தமிழர் சித்தாந்தம் என்று வண. நீ. மரிய சேவிய அடிகள் கூறியதை அறிந்த இந்துசமயப் பேரவை ஆச்சரியம் அடைந்துள்ளது.

திருமறைக் கலாமன்றம் சைவ சித்தாந்த ஆய்வு வட்டத்தை நடத்துவதை விட்டு சைவ சமயத்தினர் தவறான பார்வையைக் கொண்டிருப்பதை அறிந்திருந்தும், தொடர்ந்தும் சைவ சித்தாந்தம் தமிழர் சித்தாந்தம் எனக் கூறுவது மிகுந்த மனவேதனைக்குரியதாகும்.

சித்தாந்தம் என்பது இனிமேல் ஆராய்ச்சி இல்லை என்ற அளவிற்கு தெளிந்த முடிவு என்ற பொருளில் உள்ளது. சித்த - அந்தம் என்பதில் சித்த என்பது தேறப்பட்ட தெளியப்பட்ட என்ற பொருளில் உள்ளது. இந்நோக்கில் சித்தாந்தம் பொதுப் பேராக வழங்கத்தக்கது.

சோதிடத்தில் தெளிந்த முடிவை சோதிட சித்தாந்தம் என்கிறார்கள். கணிதத்தில் தெளிந்த முடிவை கணித சித்தாந்தம் என்கிறார்கள் பௌதீகத்தில் தெளிந்த முடிவை பௌதீக சித்தாந்தம் என்கிறார்கள். அரசியலில் தெளிந்த முடிவை அரசியல் சித்தாந்தம் என்கிறார்கள்.

இந்நோக்கில் ஒரு துறையில் தெளிந்த முடிவு அத்துறையின் சித்தாந்தமாகிறது என்பது புலனாகிறது. அந்நோக்கில் சைவத்தின் தெளிந்த முடிவு சைவசித்தாந்தம் என்பது [illegible] ஏற்ற ஒன்றாகும். இவை இவ்வாறிருக்க சைவசித்தாந்தம் தமிழர் சித்தாந்தம் என கருத்து வெளியிடுவது ஒவ்வாததாகும்.

சைவசித்தாந்தத்தை சைவசித்தாந்தமாகப் படிப்பதை நாம் ஒருபோதும் மறுத்ததில்லை. அதை நாம் சமயியல் இறையியல் நோக்கில் உள்ளார உணர்வதற்கு முனைகின்றோம் என்று கூறிக்கொண்டு தமிழர் சித்தாந்தம் எனப் பேசுவதே சைவர்களின் உள்ளங்களைப் புண்படுத்துகிறது.

நடைமுறைப் பண்பாட்டிலும் சைவசமய ஒழுக்காற்றின் ஒவ்வொர் அம்சமும் அதனுடைய சித்தாந்தத்தின் முடிவான போதம், சிவன் தாள்களை ஆன்மா தலைமேல் ஏற்றல் ஆகும். இது திருவடி தீட்சை எனப்படும். இதுவே திருவருட்பயனில் தாடலை போற் கூடுதல் எனப்படுவது.

வண. மரிய சேவியர் அடிகளால கூறுவது போல் சைவ சித்தாந்தம் தமிழருடையது என்றால், அனைத்துத் தமிழரும் சிவன் தாள்களைத் தலைமேல் ஏற்பதற்குத் தயாரா? சுவாமி சன்னிதியில் விழுந்து தலை தாழ்த்திக் கும்பிடுகிறவர்கள் சைவர்கள். சுவாமி வீதி வரும் போது சுவாமி சென்ற பாதையில் தலை தாழ்த்தி அடி அளிப்பவர்கள் சைவர்கள். இதிலிருந்து இது முற்று முழுதாக சிவனடியைத் தலைமேல் ஏற்கும் சித்தாந்த விளக்கம் குறித்த வழிபாட்டு நெறியே என்பது புலனாகிறது மேலும் சைவசமயத்திற்கு மட்டுமே இந்த ஒழுகலாறு இருப்பதை இங்கு மிக உன்னிப்பாக கவனிக்க வேண்டும்.

### அர்த்தம் இல்லாதது

தனி வழிபாட்டிலும் சரி ஆலய வழிபாட்டிலும் சரி சைவ மக்கள் அனுசரணையில் உள்ள அதனையும் சித்தாந்த உண்மையின் ஒவ்வோர் அம்சத்தையும் உளப்பூர்வமான தியான பாவனைகளால் அனுசரிப்பதாகவே இருக்கும், ஆகவே சித்தாந்தத்தை தனிமைப்படுத்தி சைவத்திலிருந்து பிரித்து தமிழரின் பாரம்பரிய சொத்து என்பன போன்ற கோஷங்களைப் பரப்புதல் எவ்வகை [illegible] வெறும் ஆரவாரமாய் முடியும் [illegible] மனமார சைவசித்தாந்தத்தை ஏற்பவர்கள் புறத்திலும் சைவ சின்னங்களை ஏற்பதே அகத்தில் ஏற்றுள்ளார்கள் என்பதற்கு சான்றாகும். சைவசித்தாந்தம் பொதுவானது எனக் காட்ட முயல்வோர் சிவசின்னங்களை அணிந்து கொண்டு முழு சைவசித்தாந்திகளாக மாறுவார்களாக இருந்தால் அவர்களை சைவ உலகம் என்றும் வரவேற்கத் தயாராக இருக்கிறது.

சமண இலக்கியமான சிந்தாமணியையும், பௌத்த மத இலக்கியமான மணிமேகலையையும் இன்னும் இது போன்ற பல இலக்கியங்களையும் நாம் எமது இலக்கியம் என்போமாகில் சைவசித்தாந்தமும் அவ்வழி எடுக்கப்பட வேண்டிய ஒன்று என அடிகளார் கூறுகின்றார். ஒரு மதத்தினுடைய இலக்கியம் எந்த மொழியிலும் இருக்கலாம். ஆனால் அந்த மதத்தின் தத்துவம் அந்த மதத்தில் மட்டும் தான் இருக்க முடியும் என்பதை நாம் அடிகளாருக்கு ஞாபகப்படுத்தி வைக்க விரும்புகிறோம். ஆகவே பாக மொழி இலக்கியம் வேறு, மதத் தத்துவம் வேறு என்பதை உய்த்து உயர்ந்து கொள்ள வேண்டும். இலக்கியத்தை இலக்கியமாகவும், தத்துவத்தைத் தத்துவமாகவும் பார்க்கும் தன்மை உள்ளுயர்வைப் பெறுவதே அறிவாகிறது.

தமிழ் நாட்டில் தோன்றிய சைவப் படைப்புகளில் சைவசித்தாந்தக் கருத்து முற்ற முடிய முழுமையாக வந்துள்ளது சைவத் திருமுறைகளில் தான். அதுவும் சைவ ஞானிகளின் வாயில் இருந்துதான் வந்துள்ளது; அவர்களும் தமிழர்கள் தான். ஆகவே சைவசித்தாந்தம் தமிழரின் பாரம்பரிய சொத்து என்பவர்கள் தமிழில் அதற்கும் புகலிடமாக இருக்கிற திருமுறைகளை ஏற்க வேண்டிய தேவையாகிறார்கள்.

சைவ சித்தாந்தத்தை உணர்வதற்கு முனையும் எவரும் அதைச் சைவ அனுசரணையோடு இருந்து சைவ சித்தாந்தமாகப் படிப்பதே சிற வழியும் பயன் தரும் மார்க்கமும் ஆகும்—இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ★


எமது ஆலயத்தில் 08 - 09 - 94 முதல்
தெய்வீகப் பேருரைகள் நிகழ்த்தும்



சிவத்தமிழ் வித்தகர்
திரு. சிவமகாலிங்கம்
அவர்களுக்கு

# பாராட்டு விழா

இடம் : பொற்பதி விநாயகர் ஆலய மண்டபம்
காலம் : 18 - 09 - 94 இரவு 6-45 மணி

தலைமை: ஆசிரியமணி
திரு. ஆர். ரீ. சுப்பிரமணியம்

பொன்னாடை போர்த்தி ஆசியுரை:
பிரதிஷ்டா சிரோன்மணி
சிவாச்சாரிய செம்மல், சிவாகம கிரியாபானு
சிவஸ்ரீ
சோ. மு. பிரணதார்த்திஹரக் குருக்கள்
(வண்ணை சிவன் தேவஸ்தானம்)

பாராட்டுரை: கவிஞர் சோ. பத்மநாதன்
(உப அதிபர், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

பதிலுரை : விழா நாயகர்

நன்றியுரை : ஸ்ரீ. இராஜசேகரக் குருக்கள்
(ஆலயக் குருக்கள்)

(சி-9147)


## நன்றி செலுத்தும் ஆராதனை

### ரூபி அரியமலர் அப்பாத்துரை
(இளைப்பாறிய ஆசிரியை, தமிழ் கொன்வென்ட் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்)

அவர்களின் வாழ்க்கைக்கும் சேவைக்கும் நன்றி செலுத்தும் ஆராதனை பரி. யோவான் ஸ்நானன் திருச்சபையில் நாளை திங்கட்கிழமை பி. ப. 4 மணியளவில் நடைபெறும்.

நண்பர்களும், உறவினர்களும் அன்பாய் அழைக்கப்படுகின்றனர்.

- திருமதி லலிதா அற்புதராஜா.

கண்டிக்குளி. [32879]



## குருநகர் வர்த்தகர் சங்கம்
# முக்கிய அறிவித்தல்

தியாகி திலீபனின் 7- ஆம் ஆண்டு நினைவாக நடைபெறும் அடையாள உண்ணாவிரதம் மவுண்கார்மேல் மண்டபத்தில் 20 ஆம் திகதி காலை 7 மணிக்கு ஆரம்பிக்கும். சகல வர்த்தக நிலையங்களையும் மூடி அதில் அனைவரையும் கலந்து கொள்ள அழைக்கிறோம்

சங்க நிர்வாகம்.
(சி/9146)


## நான்காம் ஆண்டு அஞ்சலி

மறப்பமோ பிறப்பிற்கெல்லாம்



மழலையின் மலர்வு: 07 — 03 — 1935

மாமலையின் சரிவு: 18 — 09 — 1990

### அமரர் சு. சண்முகநாதன்
(சானா)
(கல்வி அதிகாரி கல்விக் கோட்டம் வேலணை)

எங்கள் உயிரனையாய்! எமைக்காக்கும் தெய்வமே!
உங்கள் பெயர் நிலைக்க, உருவானோம் நாம் -
நால்வர்.

கண்கள் நீர் சொரிய, கலங்கி நிற்கிறோம் தடுமாறி,
தங்கள் ஆவியினாற் தழைத்து உயர்ந்து விட்டோம்.

இனியவனே! ஈடில்லாத் தந்தையே! எங்கள் அப்பா!
பெரியவனே! என்பும் உரியர் பிறர்க்கென -
வாழ்ந்தவனே!

துணை என நீ எம்முடனே இருக்கின்றாய், என்ற
நினைவுடனே வாழ்கின்றோம், நின் பிரிவை நாம் -
ஏற்கோம்.

நெஞ்சில் நிறைந்து நின்ற, நெக்குருகவிட்டு எம்மை,
செந்திற்குமரனிடம் சென்றது ஏன்? எம்மை -
வெறுத்தோ?

களைப்பான பேச்சும், கன்னமிக்காச் சிரிப்பும்
பல பல காலம் சென்றும், பாவிமுன் -
தோன்றுதையோ!

நீங்காத் துயரால் நித்தம் தவிக்கும்!
மனைவி, பிள்ளைகள், உடன்பிறந்தோர்,
உற்றார், சுற்றத்தார், நண்பர்கள்.

[7931]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா தலைமையிலான ராணுவ தலையீட்டை எந்நேரமும் எதிர்நோக்கும் சின்னஞ்சிறு ஹெய்ட்டி

கரிபியன் தீவான ஹெய்ட்டி அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகளின் படையெடுப்புக்கு எந்த நேரமும் உள்ளாகலாம்.

ஹெய்ட்டி மீது படை எடுப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் அமெரிக்கா பூர்த்தி செய்து விட்டது. ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அங்கீகாரமும் பெறப்பட்டு விட்டது.

ஜனாதிபதி கிளின்ரன் தற்போது எதிர்நோக்கி உள்ள ஒரே பிரச்சினை, ஹெய்ட்டியில் அமெரிக்க ராணுவத் தலையீட்டுக்கு எதிராக அமெரிக்க மக்கள் மத்தியில் அதிகரித்துவரும் உணர்வுகளே.

ஹெய்ட்டியில் அமெரிக்க ராணுவத் தலையீட்டை பெரும்பாலான அமெரிக்க மக்கள் எதிர்க்கிறார்கள்.

அமெரிக்காவின் நலன்களுக்கு ஹெய்ட்டி அவ்வளவு முக்கியமானதா?

பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி ஒருவரை மீண்டும் பதவியில் அமர்த்துவதற்கு உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தக் கூடிய படையெடுப்பு ஒன்று அவசியமா? என்ற குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

தனது நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்கு ஜனாதிபதி கிளின்ரன் முயற்சி செய்து வருகிறார்.

### கிளின்ரனின் டெலிவிஷன் உரை

கடந்த வியாழக்கிழமை இரவு வெள்ளை மாளிகையில் இருந்து டெலிவிஷன் மூலம் நாட்டு மக்களுக்கு அவர் விசேட உரை நிகழ்த்தினார்.

தமது உரையில் ஹெய்ட்டி மீதான தனது நடவடிக்கைகளுக்கான காரணத்தை ஜனாதிபதி கிளின்ரன் விளக்கினார்.

அப்போது ஹெய்ட்டி இராணுவ ஆட்சியாளர்களுக்கு அவர் இறுதி எச்சரிக்கையையும் விடுத்தார்.

ஹெய்ட்டியில் மனித உரிமைகள் மீறப்பட்டு வருவதாகவும் கிளின்ரன் குற்றஞ்சாட்டினார். படை எடுப்பைத் தவிர அமெரிக்காவுக்கு வேறு வழி இல்லை என்றும் அவர் கூறினார்.

ஹெய்ட்டி மீது படை எடுப்பதற்கு தற்போது 20 ஆயிரம் படையினர் அமெரிக்காவில் தயாராக உள்ளனர். எந்

Aristide) பதவி கவிழ்க்கப்பட்டதில் இருந்து பல்லாயிரக்கணக்கான ஹெய்ட்டி மக்கள் ஹெய்ட்டியில் இருந்து வெளியேறி வருகின்றனர். அமெரிக்காவில் தஞ்சம்

**வெளி உலகம்**

அடையும் நோக்கத்துடன் உயிரைத் துச்சமாக மதித்து தோணிகளிலும் கடலில் படகுகளிலும் வரும் இவர்களை ஆரம்பத்தில் அமெரிக்கா விசா

ணையில் தற்போது பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட்டு விட்டது.

வருடம் 20 ஆயிரம் கியூபா அகதிகளை தனது நாட்டில் ஏற்றுக் கொள்ள அமெரிக்கா இணக்கம் தெரிவித்துள்ளது.

ஹெய்ட்டிப் பிரச்சினையும் ராணுவ ரீதியிலோ அல்லது அரசியல் ரீதியிலோ தீர்க்கப்பட்டு விடுமானால் பெரும்பாலான அகதிகள் ஹெய்ட்டி திரும்பி விடுவார்கள்.

எடுக்கவுள்ள இந்த எண்ணிக்கை ஆகும்.

20 ஆயிரம் பேரைக் கொண்ட அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகளுக்கு ஹெய்ட்டியின் 7 ஆயிரம் படை ஒரு பொருட்டல்ல ஆட்சி மாற்றம் நொடிப் பொழுதில் நடந்து விடலாம்.

ஆனால் அரிஸ்ரைட்டை பதவியில் அமர்த்தி விட்டு அவருக்கு பாதுகாப்பு அளிக்கும் பெரும் பணி இன்னும் கேள்விக் குறியாகவே இருந்து வருகிறது.

## சமாதானத்தூது செல்லவுள்ள கார்ட்டர் தனது முயற்சியில் வெற்றி பெறுவாரா?

நேரமும் புறப்படத் தயாராக இரு விமானம் தாங்கிக் கப்பல்களில் தயார் நிலையில் அவர்கள் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த படை எடுப்பில் அமெரிக்கா தனித்து நிற்கவில்லை.

ஆர்ஜென்ரீனா, அன்ரிகுவா, பஹாமாஸ், பங்களாதேஷ், பார்படோஸ், பெலிஸ், பெல்ஜியம், பொலிவியா, டொமினிக்கா, கயானா, இஸ்ரேல், ஜமேய்க்கா, நெதர்லாந்து, பனாமா, பிரிட்டன், சென்கிற்செவிட், ரினிடாட் டுபாக்கோ, ஜோர்தான் உட்பட 20 நாடுகளின் படைகள் அமெரிக்கப் படைகளுடன் இணைந்து கொண்டுள்ளன.

ஆனால் வளைகுடா யுத்தம் போன்ற பிரதான பங்கேற்க இருப்பது அமெரிக்காவே.

### அகதிகள் பிரச்சினை

1991ஆம் ஆண்டு நடந்த ராணுவப் புரட்சியின் போது ஜனாதிபதி ஜீன் பேர்ட்ரண்ட் அரிஸ்ரைட் [Jean Bertrand

ரணை எதுவுமே இன்றி மனிதாபிமானமற்ற முறையில் நடுக்கடலில்வைத்து திருப்பி அனுப்பி வந்தது.

ஆனால் இராணுவ தலையீட்டை மனதில் கொண்டு சமீப காலமாக கிளின்ரன் நிர்வாகம் தனது கொள்கையை மாற்றிக் கொண்டது. ஹெய்ட்டி அகதிகளுக்கு தனது நாட்டில் தஞ்சம் அளித்து வருகிறது.

ஹெய்ட்டி, கியூபா அகதிகள் பிரச்சினை சமீப காலத்தில் அமெரிக்காவின் மனிதாபிமானக் கொள்கைகளுக்கு பெரும் சவால் என்றே கருதப்படுகிறது.

கியூபா அகதிகள் பிரச்சி

### ராணுவ ஆட்சியாளர்கள் பிடிவாதம்

ஹெய்ட்டி ராணுவ ஆட்சித் தலைவர் ராவுல் செட்றாஸ், (Raoul Cedras) பதவி துறக்கும் படி ஜனாதிபதி கிளின்ரன் கடந்த வியாழன் இரவு விடுத்த கடைசி எச்சரிக்கையையும் நிராகரித்து விட்டார்.

கிளின்ரனின் எச்சரிக்கை ஹெய்ட்டியில் தற்போது பெரும் பதற்ற நிலையை உருவாக்கி உள்ளது. யுத்த பீதி அங்கு ஏற்பட்டுள்ளது.

ஹெய்ட்டியின் தற்போதைய இராணுவ பலம் 7 ஆயிரம் மட்டுமே. அதுவும் பொலீஸ்காரர்களையும் உள்

அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப்படைகள் ஹெய்ட்டி மீது படை எடுப்பு நடத்தி ராணுவ ஆட்சியாளர்களை வெளியேற்றி விட்டு அரிஸ்ரைட்டை பதவியில் அமர்த்திய பின் வெளியேறி விடும்.

அதன் பின்னர் 6 ஆயிரம் பேரைக் கொண்ட ஐ.நா. படைகளை அங்கு அனுப்பி வைக்க ஏற்பாடாகி இருக்கிறது.

இத்தகைய நிலையில் சோமாலியாவிலும், பொஸ்னியாவிலும் நடந்தது போல ஹெய்ட்டியிலும் ஐ.நா. படைகள் தாக்குதலுக்கு உள்ளானால் என்ன செய்வது என்ற கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது.

இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டே ஹெய்ட்டி பிரச்சினையில் இராணுவத் தலையீட்டை அமெரிக்கா இயன்றவரை தவிர்த்து வந்தது.

ஆனால் அமெரிக்காவுக்கு இது தன்மானப் பிரச்சினையை தோற்றுவித்திருப்பதால் ஹெய்ட்டி மீதான படை எடுப்பு தவிர்க்க முடியாததொன்றாகிவிட்டது.

எந்த ஒரு இராணுவ தலையீட்டையும் அமெரிக்க மக்கள் முதலில் எதிர்ப்பார்கள் பின்னர் ஆதரிப்பார்கள் என்பது கிளின்ரனுக்குத் தெரியும்.

1990 வளைகுடா யுத்தத்தின் போது அமெரிக்கத் தலையீட்டுக்கு அமெரிக்க மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பு இருந்தது. ஆனால் யுத்தம் ஆரம்பமானதும் யுத்தத்துக்கு மக்களின் முழு ஆதரவையும் பெறமுடிந்தது.

### 1990 தேர்தல்

ஹெய்ட்டியில் 1990 டிசம்பரில் நடந்த ஜனநாயக முறையிலான தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கு வந்தவர்தான் ஜீன் பேர்ட்ரண்ட் அரிஸ்ரைட்.

ஆட்சிக்கு வந்து 6 மாதங்கள் மட்டுமே இவர் ஆட்சி

**சஞ்சாரன்**

யில் இருந்தார்.

1991 செப்ரெம்பரில் இராணுவப் புரட்சி மூலம் இவர் பதவி கவிழ்க்கப்பட்டார்.

இராணுவத் தளபதி ராவுல் செட்றாஸ் ஆட்சியைக் கைப்பற்றினார்.

1989—90 சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் பின்னர் "உலக பொலீஸ்காரன்" பதவியை எடுத்துக் கொண்ட அமெரிக்கா அரிஸ்ரைட்டை மீண்டும் ஜனாதிபதி பதவியில் அமர்த்தும் முயற்சியில் இறங்கியது.

பதவி நீக்கம் செய்யப்பட்டதிலிருந்து அரிஸ்ரைட் அமெரிக்காவில் தஞ்சம் இருந்து வருகிறார்.

இராணுவ ஆட்சியாளர் செட்றாஸ் ஹெய்ட்டியில் இருந்து வெளியேறவேண்டும் என்பதும் அரிஸ்ரைட் மீண்டும் ஆட்சிபீடம் ஏறவேண்டும் என்பதும் அமெரிக்காவின் கோரிக்கை.

### ஹெய்டி மீது நிர்ப்பந்தம்

தனது நோக்கத்தை நிறைவேற்றும் நோக்கத்துடன் அமெரிக்கா ஏற்கனவே ஐ.நா. மூலம் ஹெய்ட்டி மீது தடைகளை விதித்துள்ளது.

ஹெய்ட்டி ராணுவ ஆட்சியாளர்களின் பிரதிநிதிகளை அமெரிக்காவுக்கு அழைத்து அரிஸ்ரைட்டுடன் ஒப்பந்தமும் செய்து பார்த்தது.

ஆனால் ஒன்றும் பலன் அளிக்கவில்லை.

அரிஸ்ரைட்டிடம் ஆட்சியை ஒப்படைப்பதாக ஹெய்ட்டி இராணுவ ஆட்சியாளர்கள் அமெரிக்காவுக்கு வாக்குறுதி அளிப்பார்கள்.

ஆனால் இந்த வாக்குறுதிகள் எல்லாம் பின்னர் காற்றில் பறக்கவிடப்பட்டு விட்டன.

இப்படியாக மூன்று வருடங்கள் இழுபட்ட நிலையிலேயே அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் ஹெய்ட்டி மீது படை எடுப்பதற்கான இறுதி எச்சரிக்கையை கடந்த வியாழன்று டெலிவிஷனில் விடுத்தார்.

அரிஸ்ரைட்டிடம் ஆட்சியை ஒப்படைப்பது போல் நடித்து மூன்று வருட காலத்தைக் கடத்தி விட்ட ஹெய்ட்டி இராணுவ ஆட்சியாளர்கள் ஹெய்ட்டியில் தமது நிலையைப் பலப்படுத்திக் கொண்டு விட்டனர்.

அமெரிக்க ராஜதந்திரத்துக்கு இது ஒரு தோல்வி என்றே கருதப்படுகிறது.

1991 இன்பின் அரிஸ்ரைட்டின் ஆதரவாளர்கள் பலர் ஹெய்ட்டியில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மீண்டும் தலைதூக்க முடியாத அளவுக்கு ஹெய்ட்டியில் ஜனநாயக சக்திகள் வேரறுக்கப்பட்டு விட்டன.

1993 ஜனவரியில் வெறும் கண்துடைப்புக்கு ஹெய்ட்டி ஆட்சியாளர்கள் தேர்தல் ஒன்றை நடத்தினர்.

அத் தேர்தலில் தெரிவு

[5ஆம் பக்கம் பார்க்க]

---

போரினால் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழ் மக்களின் சுகாதார மற்றும் வைத்திய தேவைகள் குறித்து ஆராய்ந்து குறைபாடுகளைத் தீர்ப்பதற்காகவும்—

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிக்கப்பட வேண்டிய நிவாரணங்கள் குறித்து நடவடிக்கைகள் எடுக்கவும் நேற்றும் இன்றும் லண்டனில் சர்வதேச மாநாடு ஒன்று நடைபெறுகின்றது. இம்மாநாட்டை லண்டனில் உள்ள தமிழர் மருத்துவ நிறுவனம் கலிபோர்னியாவில் உள்ள தமிழ் அகதிகள் புனர்வாழ்வு அமைப்புஇணைந்து நடத்துகின்றன.

இதனையொட்டி Victims of war in Sri Lanka என்ற தலைப்பில் வெளியான பிரசுரத்தின் சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றது

தொகுப்பு: பாரதிநேசன்

# யுத்தத்தினால் உடல்,உள ரீதியாக பாதித்து அவலப்படும் ஈழத்தமிழர்

போலாந்துப் போர். அரபுக்குடா யுத்தங்கள், பொஸ்னியப் போர் போன்ற சில சர்வதேசிய நெருக்கடிகள் உலகின் கவனத்தை ஈர்த்தது; அனுதாப அலைகளை எழுப்பியுள்ளன. ஸ்ரீலங்காவில் உள்ள தமிழ் மக்களின் நிலைமை இத்தகையது அல்ல. அவர்களின் அவலமும் அச்சமூகத்தின் பூரணமான சிதைவும் பொதுவாக உதாசீனம் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 20 ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் இராணுவ நடவடிக்கைகள், உள்நாட்டு யுத்தம் மற்றும் பொருளாதார முற்றுகை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கான பெண்கள் விதவைகள் ஆகியுள்ளனர்; குழந்தைகள் அனாதைகள் ஆகியுள்ளனர். நூற்றுக்கணக்கான பெண்கள் கற்பழிக்கப்பட்டுள்ளனர். எண்ணற்ற மக்கள் ஊனமுற்றுள்ளனர்; கைது செய்யப்பட்டுள்ளனர்; சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர். பத்தாயிரத்துக்கு மேலான தமிழர் காணாமல் போயுள்ளனர். 40 ஆயிரத்துக்கு மேலான தமிழர் இறந்துள்ளனர். பத்து லட்சத்துக்கு மேலானவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்காவின் வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ்த் தாயகத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை அபாயகரமானதோர் போராட்டமாக அமைந்துள்ளது. அநேக பிரதேசங்களில் தற்போது சுகாதார, கல்வி மற்றும் அடிப்படை சேவைகள் நிலவவில்லை. நகரங்கள், கிராமங்களில் அரைவாசிக்கு மேற்பட்டவை அழிக்கப்பட்டுள்ளன.

மக்களில் பலர் கோயில்கள், பாடசாலைகள் சனசமூக நிலையங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஆகியன அமைத்த அகதி முகாம்கள் ஆகியவற்றில் தஞ்சம்புகுந்திருக்கிறார்கள்.

### பொருளாதார முற்றுகை

இங்கு முற்றுமுழுதான பஞ்சம் ஏற்படவில்லை என்ற போதும் பொருளாதார முற்றுகையால் கடுமையான இடைவிடாத உணவு, மருந்துப் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனால் மக்களுக்குப் பெரும் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. காசநோய், மலேரியா, வயிற்றோட்டம், வாந்திபேதி சின்னம்மை, குஷ்ட

## ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க லண்டன் நகரில் சர்வதேச மாநாடு

ரோகம் போன்ற நோய்களின் பாதிப்பு போஷாக்கின்மையால் கடுமையாகியுள்ளது. நோய்க்கட்டுப்பாட்டுத் திட்டங்கள் உட்பட அரசாங்க சுகாதார சேவை சீர்குலைந்துள்ளதால் இந்த நோய்கள் மீண்டும் ஏற்பட்டுள்ளன.

எரிபொருள் தடையால் வடக்கில் அம்புலன்ஸ் வாகனங்களைப் பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. சரியான போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால் பல நோயாளிகள் இறந்துள்ளனர். உணவு தேடி அலையும் கட்டாக்காலி நாய்களால் கடிக்கப்பட்ட பலர் நாய்க்கடித் தடுப்பு மருந்து இல்லாத காரணத்தால் இறந்துள்ளனர்.

கர்ப்பிணித் தாய்மாருக்கு போதிய உணவின்மையாலும் போதிய போஷாக்கான உணவின்மையாலும் குழந்தை மரணவிகிதம் அதிகரித்துள்ளது. குண்டு வீச்சுக்கு(?) மற்றும் வன்முறை நிகழ்வுகள் ஏற்படுத்திய அதிர்ச்சியில் பல குழந்தைகள் குறைமாதத்தில் பிறந்துள்ளன.

### உள ஆரோக்கியம்

யுத்தத்தால் வாழ்க்கை நிலைமைகளும் உடல், உள நலனும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

நீடித்து நடைபெறும் யுத்தம், சித்திரவதை அனுபவம், இடம்பெயர்வு ஆகியவற்றால் தமிழ் மக்களின் உள ஆரோக்கியம் பெரிதும் குன்றியுள்ளது. ஆயுத படையினர் அடிக்கடி பொது மக்கள் வன்முறையில், ஆயுத படையினரின் தாக்குதல்கள பொதுமக்களுக்கு ஆழமான உளவியல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக வயோதிபர், பெண்கள், மாணவர்கள் ஆகியோர் உளவியல் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள் குறிப்பாக 15—34 வயதுக்கு இடைப்பட்டவர்கள் தற்கொலை செய்வது அதிகரித்துள்ளது.

நாட்டை விட்டுத் தப்பி போடிய தமிழ் அகதிகள் மத்தியில் பதற்றநோய் பெரிதும் அதிகரித்துள்ளது. பிரிவு, தப்பியோடியதற்கு முந்திய அனுபவம், அல்லது தப்பியோடியபோது ஏற்பட்ட அனுபவம் ஆகியவற்றின் பதற்ற உணர்ச்சிகளை அவர்களை அழுத்துகிறது.

### யுத்தத்தின் குழந்தைகள்

தமிழ்த் தாயகத்தில் உள்ள ஆயிரக் கணக்கான குழந்தைகள் யுத்தத்தால் பீதி அடைந்து இருக்கிறார்கள். பாதுகாப்பின்மை, வீடின்மை, வன்முறை மரணங்கள், ராணுவப் பயிற்சி, போர் ஆகியவற்றால், இக்குழந்தைகள் தமது வளரும் வயதில் வளர்ச்சி பாதிக்கப்பட்டவர்கள் ஆகிறார்கள்.

சித்திரவதை … செய்யப்படுகிறது. ஆயிரக் கணக்கான … வகைச் சித்திரவதைகளுக்கு ஆளாகியுள்ளனர் இதனால் பலர் உடல் ரீதியிலும் உள ரீதியிலும் நிரந்தரமாகப் பாதிப்புற்றுள்ளனர்.

### நாடு கடத்தலும் மீள அமர்த்தலும்

மூன்றாவது உலக நாடுகளிலிருந்து அகதிகள் வருவதைக் கட்டுப்படுத்த மேலை நாடுகள் திட்டங்களை வகுத்துள்ளன. சுவிற்சர்லாந்து, டென்மார்க், நோர்வே, பிரிட்டன் ஆகிய நாடுகள் தமிழரை நாடு கடத்தும் என அச்சுறுத்துகின்றன. ஏற்கனவே இந்தியாவிலிருந்து 50 ஆயிரத்துக்கு அதிகமான தமிழ் அகதிகள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். மற்ற நாடுகளிலும் தமிழ் அகதிகள் மீதான வெறுப்பு வளர்கின்றது.

1948 முதல் நடைபெற்று வரும் சமாதான முயற்சி வெற்றி காணவில்லை. ஒரு அரசியல் தீர்வு காணப்பட்டாலும் கூட பாரிய பிரச்சினைகள் மிஞ்சி இருக்கும். அகதிகளை எப்படி நாடு கடத்துவது? அவர்களுடைய பாதுகாப்பை எப்படி உத்தரவாதம் செய்வது? அகதிகளையும் இடம்பெயர்ந்த மக்களையும் எப்படி மீளக்குடியமர்த்துவது? இவையெல்லாவற்றிலும் பார்க்க மிகவும் கஷ்டமான பிரச்சினை — தமிழ்ச் சமூகத்தையும் பொருளாதாரத்தையும் எப்படி மீண்டும் கட்டியமைப்பது? ★

---

# மனித விழுமியத்தைப் பேணுகின்ற கத்தோலிக்க மாணவர் ஒன்றியம்

வருங்காலத் தலைவர்களாக தம்மை உருவாக்க விழையும் பல்கலைக்கழக மாணவர்கள், வாழ்வை வளப்படுத்தும் சமயப்பற்றுள்ளவர்களாய் வளரவழி செய்வதே கத்தோலிக்க மாணவ ஒன்றியத்தின் முக்கிய நோக்காகும். இவ் வாழ்வு தமக்காக வாழும் ஒரு வாழ்வு மட்டுமன்று; பெற்றதை பகிர்ந்து கொள்ளும் பண்புடையதாகவும் இருக்க வேண்டும். இந்த ஒன்றியம் பல்கலைக்கழக வளாகம் தொடங்கிய காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. 1974 முதல் 1984 வரையிலான பத்தாண்டு காலத்தில் ஒன்றியத்தின் பணி அமைப்பு நிலை கொண்டதாக இருக்கவில்லை. ஆனால் முக்கிய நிகழ்வுகளில் முன்னின்று உழைத்து, விழிப்புணர்வூட்டி, ஆக்க பூர்வ செயல்பாடுகளுக்கு உந்துசக்தியாக விளங்கியது.

மும்மத, இருமொழிப் பிரிவுகளை உள்ளடக்கி நின்ற பல்கலைக்கழக சூழலில் மனித விழுமியங்கள் பற்றிய விழிப்புணர்வுகளை நிலைநாட்டுவது இதன் தொடர் நோக்காக இருந்தது. அந்த … முன்னேறும் சமூகத்தில் "சமய-சமூகக்குழும உணர்வு" உருவாக்கும் அவசியம் உணரப்பட்டது. இதற்கு தனி நபர்களுக்கிடையிலான புரிந்துணர்வு, குழும வாழ்வின் பங்கேற்பு என்பன இன்றியமையாதவையென சமூகத்தின் எல்லா நிலையினரும் … உணர்ந்தனர். இக் … அமைப்பும் … பொருத்தமானதாக கணிக்கப்பட்டது.

மாணவ சமூகத்தின் ஒத்துழைப்பையும் கத்தோலிக்க மாணவர்கள் பெற்றனர்; அதன் வெளிப்பாடாக தலைமைத்துவம் உட்பட பல்வேறு பணிகளுக்கும் இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். முன்பு குறிப்பிட்ட மும்மத, இருமொழி பிரிவுகள் மத்தியில் கத்தோலிக்க மாணவர்கள்

> யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் 10ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

இணைப்புப் பாலமாக இயங்கினர்.

1977ஆம் ஆண்டிலிருந்து தம் மத்தியில் மண்பற்று, வாழ்வின் அனைத்து நிகழ்வுகளிலும் தன்னிறைவு காணத் துடிக்கும் உணர்வுகளே தலைதூக்கி நிற்கின்றன இச் சூழலில் நாட்டில் தன்னிறைவு, சமநிர்ணயம் போன்றவற்றிற்கு தம்மை அர்ப்பணிக்கும் குடிமக்களை உருவாக்குவதையே வளாகம் இலக்காக கொண்டு இயங்குகின்றது.

எனவே சமகால நிகழ்வுகளால் உருவாகும் மனநிலைகள், கொள்கைகள் நிறைந்த மூன்றாம் பத்தாண்டு காலகட்டத்துள் எமது ஒன்றியம் காலடி எடுத்து வைக்கின்றது.

இந்நிலையில் அறிவு, வளம், நல்வாய்ப்புக்களை பகிர்வதில் ஏற்படும் சவால் போன்றவைகளை சந்திக்க மாணவ சமூகம் அழைக்கப்படுகின்றது. எனவே ஒன்றியத்தின் எதிர்கால திட்டங்கள் அனைத்தும் புதிய நிலைகள் வேண்டி நிற்கும் சவால்கள், தொடர்ந்து வரும் மாற்றங்கள் என்பவற்றிற்கு மாணவர் முகங்கொடுக்க உதவும் வகையில் அமைய வேண்டும்.

### ஒன்றியத்தின் குறிக்கோள்கள்

★ இம் மண்ணில் தம்மை அர்த்தமுடன் ஆழமாக அர்ப்பணிக்கக் கூடிய கிறிஸ்தவ தலைவர்கள் உருவாகும் சூழலை ஏற்படுத்தல்.

★ மாணவர்களிடையே மனித முன்னேற்றம், நீதி, சமாதானம் என்பவற்றை வளர்த்தல்.

★ இறைவார்த்தையையும் திருச்சபையின் சமூகப் படிப்பினைகளையும் கற்ற, கத்தோலிக்க அறிவு நிறைந்த மாணவர்களை உருவாக்குதல். இதனால் சமூக மெய்மைகள் பற்றிய தெளிவான சிந்தனை அவர்களுக்கு ஏற்பட்டு அவற்றில் இறுதி நிலையில் ஈடுபாடு கொள்ளத் தூண்டுதல்.

★ உண்மையாக தம்மை இறைவிசுவாசத்துடன் அர்ப்பணிக்கும் மக்களை உருவாக்குதல் - அர்ப்பணிப்பு எதிர்பார்க்கப்படும் அவலத்து விசுவாசத்தின் தன்மையும் வேண்டப்படுகிறது.

★ கிறிஸ்தவர்களின் வாழ்வு, அவர்கள் முகம்கொடுக்கும் சவால்கள், எதிர்கொள்ளும் போராட்டங்கள், துன்பங்கள் என்பனவற்றை இறைவார்த்தை, திருச்சபை மரபு என்பவற்றின் ஒளியில் கண்டு, இவற்றால் உறுதி பெற்று வாழ முயற்சித்தல்.

மாணவர்களின் பலவகைப்பட்ட திறமைகள் ஆற்றல்களை இனங்கண்டு அனைத்து பரிமாணங்களிலும் வளரச் செய்தல்.

★ அவர்களின் விசுவாச வாழ்வு, அவர்கள் தம் வாழ்க்கை அனுபவத்தின் அனைத்து பரிமாணங்களையும் உள்ளடக்கியதொன்றாக இருக்கச் செய்தல். எனவே, நிலையான தரமான மேற்கொள்ளப்படும் ஆன்மீகப் பணியானது ஒவ்வொருவரின் வாழ்வில் அவர்களுடன் இணைந்து, நடந்து, அவர்களின் ஈடுபாடு, ஆக்க சக்தி அனைத்திலும் அவர்களை ஊக்குவித்து, இளம் உள்ளங்கள் உருவாக்க முயலும் புதிய மொழி மேற்கொள்ளும் புதிய அடையாளங்களுக்கு வழி வகுத்தல்.

★ ஈடுபாட்டால் ஆன்மீகம் உருவாக்குதல் - இந்த ஆன்மீகம் அருமையான சமூக மெய்மைகளில் இருந்து ஒழுங்கு வாழ்வு, ஏழைகளுக்கு தம்மை அர்ப்பணிப்பதை சிறப்பு அம்சமாக கொண்டது என்பதை வலியுறுத்தல். ★

அருள்திரு. மா. றேஜிஸ் இராசநாயகம்
நல்லாயன் நடு நிலையம், யாழ். பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## சீமெந்து ஆலைகள்

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை விரைவில் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக வீடமைப்பு நிர்மாணத்துறை, பொதுவசதிகள் அமைச்சர் நிமால் சிறிபால டி. சில்வா அறிவித்திருக்கிறார்.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஈழம் II யுத்தம் ஆரம்பித்ததை அடுத்து காங்கேசன் ஆலைகள் செயல் இழந்தன.

இதனால் காங்கேசன்சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்கள் மூவாயிரம் என்னூறு பேரும் லங்கா சிமெந்து லிமிட்டெட் நிறுவன ஊழியர்கள் ஐநூறுக்கு அதிகமானோரும் வேலை இழக்கும் ஆபத்து ஏற்பட்டது.

இந்த நிலையில் சிமெந்து ஆலைகளைத் திறக்க முயற்சி எடுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

ஆனால்—

ஆலைகளைத் திறக்க முயலும் அரசு அதனை தனக்கு வருமானம் தரும் ஒரு தொழிலாகக் கருதாது இந்தப் பிரதேசத்திற்குரிய அமைப்புகளாக அவற்றை செயற்படச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

இந்த பிரதேசத்தில் உள்ள சுண்ணாம்புக்கற்களை வெட்டி எடுத்து, இந்த மண்ணில் உள்ள தொழிலாளர்களைப் பயன்படுத்தி இங்கு உற்பத்தியாகும் சிமெந்தை அரசு கண்மூடித்தனமாக தெற்குக்கு எடுத்துச் செல்லும் நோக்கத்தை கைவிட்டு விடவேண்டும்.

குடாநாட்டுக் சுண்ணாம்புக்கல் பெரிய அளவில்— தினசரி பல நூறு தொன் கணக்கில்— அகழ்ந்து எடுக்கப்படுவதால் இந்த மண்ணின் நன்னீர் உவர்நீராக மாறும் நிலை ஏற்படும் என ஏற்கனவே எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுகள் தூசுகள், நச்சு வாயுக்கள் போன்றவை இந்த மண்ணின் மீதுதான் படியப்போகின்றன.

இத்தகைய அழிவுகளை எமது மண் எதிர்கொள்ள — இங்கு தயாராகும் சிமெந்தை — தொன் தொன்னாக தெற்கே அனுப்ப திட்டமிடக் கூடாது.

கடந்த நான்கு ஆண்டுகளாக இந்த மண்ணின் மீது ஸ்ரீலங்கா அரசப் படைகள் செய்த அட்டூழியங்களால் ஏற்பட்ட அழிவுகள், அனர்த்தங்கள் அதிகம்.

அந்த அழிவுகளைச் சீர்செய்ய பெரும் தொகை சிமெந்து தேவைப்படும்.

ஆதலாலும் —

தான் செய்த அழிவு வேலைகளுக்கு ஓரளவு பரிகாரம் காணும் வகையிலும் —

இந்த மண்ணின் சிமெந்துத் தேவை பூர்த்தியடையும் வரை இங்கு உற்பத்தியாகும் சிமெந்தில் ஆகக் குறைந்தது அரைவாசியை தமிழ்ப் பகுதிக்கென ஒதுக்குவது என்று தீர்மானித்துவிட்டு, இந்த ஆலைகளை திருத்தும் செயற்பாட்டை அரசு ஆரம்பிக்க வேண்டும்.

அதைவிடுத்து —

தொடர்ந்தும் இந்த மண்ணை சூறையாடும் எண்ணத்துடன் ஸ்ரீலங்கா அரசு ஆலைகளைத் திருத்த முற்படக்கூடாது.

தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில் உற்பத்தியாகும் சிமெந்துக்கு அதிக விலை கொடுக்க வைக்கக் கூடாது.

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனத்தைத் திருத்த சுமார் பத்துக் கோடி ரூபாவும்—

லங்கா சிமெந்து லிமிட்டெட் நிறுவன ஆலையைத் திருத்த 6 கோடி 80 லட்சம் ரூபாவும் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தளவு பணத்தைச் செலவிட ஆரம்பிக்க முன்னர்—

அரசு மேற்படி விடயத்தில் ஒரு முடிவை எடுத்து அதனை அறிவிக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல —

சிமெந்து ஆலை திருத்தப்பட்டு செயல்படுவதாயின் ஆலையின் சுற்றாடலும், ஆலைக்கு மக்கள் சென்று வரும் பாதை அமைந்துள்ள பிரதேசமும், சுண்ணாம்புக்கல் அள்ளப்படும் பகுதியும் பாதுகாப்பான பிரதேசமாக இருக்கவேண்டும். சுருக்கக் கூறின் காங்கேசன்துறை பிரதேசமே படையினர் நடமாட்டத்துக்கு அப்பாற்பட்டதாக இருக்கவேண்டும்.

# பிரதமர் சந்திரிகாவின் ஒருமாத ஆட்சிக் காலத்தில்
# பஞ்ச விடயங்கள் தொட்ட குறை, விட்ட குறையில்!

புதிய பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா பதவியேற்று இன்றுடன் ஒரு மாத காலம் பூர்த்தியாகிறது.

தாம் சொன்னதைச் செய்யக்கூடியவர்; ஆளுமை மிக்கவர்; பிரச்சினைகளைக் கையாளக்கூடியவர்; எதிர்ப்புகளைச் சமாளித்து முன்னேறக் கூடியவர்; கஷ்டமான சூழ்நிலைகளிலும், கஷ்டங்களின் மத்தியிலும் அவற்றுக்கு எதிராக நீச்சலடித்து வெற்றிகாணக் கூடியவர்; திறமையும் சாதுரியமும் நிறைந்தவர் என்பதை சந்திரிகா கடந்த ஒரு மாதகாலத்தில் நிரூபித்து விட்டார்.

அரசியலுக்கு புதியவர் என்று சொல்லக்கூடியவர் நாடாளுமன்ற உறுப்பினராக இப்போது தான் தெரிவாகியவர். மக்கள் ஆதரவினால் அரசியலில் முன்னுக்குத் தள்ளப்பட்டவர். தங்களுக்கு விடிவு தரக்கூடியவர் என்று சிங்கள மக்களின் நம்பிக்கைக்கு உரியவராகிவிட்டவர்.

ஸ்ரீலங்காவில் பல வருடங்களின் பின்னர் நீதியான, சுத்தமான, திறமையான அரசாங்கம் ஒன்றை நடத்த வேண்டும் என்ற விருப்பத்துடன் ஆட்சிக்கு வந்தவர். தமது திறமையில் மட்டுமே நம்பிக்கை வைத்து அரசியலில் உயர்ந்திருக்கிறார்.

### செல்வாக்கு பெற்றவர்

பதவிக்கு வந்த ஒரு மாத காலத்தில், உலகளாவிய ரீதியில் சந்திரிகாவின் திறமையும் துணிவும் பாராட்டப்படுகின்றன- வெளிநாட்டுப் பத்திரிகைகள் பலவும் அவரது நடவடிக்கைகளை வியந்து எழுதத் தொடங்கியுள்ளன.

சிலர் பதவிகளை அலங்கரிக்கிறார்கள். ஏனையோர் தமக்குக் கிடைக்கும் பதவிகளால் அலங்கரிக்கப்படுகிறார்கள். சந்திரிகா குமாரதுங்கா முதலாவது ரகத்தைச் சேர்ந்தவர்.

1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட புதிய அரசமைப்புச் சட்டத்தின் பின்னர் ஜே.ஆர். தொடக்கம் விஜேதுங்கா (19-08-94) வரை ஜனாதிபதிகளே செல்வாக்குள்ள தலைவர்களாக இருந்தனர். பிரதமர்களாக இருந்தவர்கள் வெறும் பத்திரப் பட்டம் உடையவர்களாக விளங்கினர்.

ஆனால் சந்திரிகா பிரதமரான பின்னர், ஜனாதிபதி என்று ஒருவர் இருப்பதனைக் கூட மக்கள் மறந்து விட்டனர். ஒரு மாத காலத்தில் சந்திரிகா பூண்ட செல்வாக்கு உலகில் வேறு எந்தப் பகுதியிலும், வேறு எந்தத் தலைவராலும் அடையப்பட்டதா என்பது ஆராய்ச்சிக்குரிய ஒரு விடயமாகி விட்டது. இத்தனைக்கும் அவர் மிகக் குறுகிய காலத்தில் (சுமார் 1வருடத்தில், எத்தனையோ தடைகளுக்கு மத்தியிலேயே உச்ச நிலையை அடைந்திருக்கிறார் என்று கூறலாம்.

### பஞ்ச விடயம்

இதே வேளை, சந்திரிகா தமது தேர்தல் வாக்குறுதிகளாகத் தெரிவித்த முக்கிய விடயங்களில், பஞ்ச விடயங்களில் இன்னும் ஒன்றைத் தானும் முழுமையாகச் செய்து காட்டவில்லை என்பது நினைவிற் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். ஆயினும் அவற்றைச் செய்து முடிப்பார் என்ற நம்பிக்கையை மக்கள் மனதில் பதித்து விட்டார். அது தான் அவரின் திறமை; வெற்றியும் கூட.

★ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது.
★ மக்கள் பரந்த அளவில் பயனடையக்கூடிய திறந்த பொருளாதாரத்தை உருவாக்குதல்.
★ அரசமைப்பு மாற்றம்
★ மனித உரிமைகளைச் சரிவரப் பேணுதல்.
★ அரச நிர்வாகத்தில் இருந்து ஊழல், மோசடியை ஒழித்தல்.

மேற்கண்ட ஐந்து விடயங்களுக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்னுரிமை கொடுத்து வலியுறுத்தி இருந்தது. திருமதி சந்திரிகா குமாரதுங்காவும் தேர்தல் பிரசாரத்தின்போது இவற்றை முக்கியப்படுத்தி வந்தார்.

இந்த ஐந்து விடயங்கள் சம்பந்தமாகவும் அரசாங்கம் ஒவ்வொன்றையும் மெதுவாகத் தொட்டுப் பார்த்துள்ளதே அன்றி, எதனையும் முற்றிலும் செய்து முடிக்கவில்லை. ஒரு மாத காலத்தில் இவற்றை முற்றாக நடைமுறைப்படுத்த இயலாது என்பதனை எவரும் ஏற்றுக் கொள்வர்.

மொத்தமாகப் பார்க்கப் போனால், தெற்கில் பாண், மா மற்றும் சில பொருள்களின் விலைகள் குறைக்கப் பட்டுள்ளன. வடக்கின் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத்தடை தளர்த்தப் பட்டுள்ளது; இந்த இரண்டையும் விட ஏனையவை எல்லாம் இன்னமும், வாய்மொழிகளாகவும், திட்ட வடிவங்களாகவுமே இருக்கின்றன.

### இடியப்பச் சிக்கல் இனப்பிரச்சினை

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் கடந்த பதினொரு வருடங்களுக்கு மேலாக நிலவி வந்த முறுகல் நிலை சற்றுத் தணிந்து நல்லெண்ணச் சூழல் ஒன்று உருவாகியுள்ளது அவ்வளவு தான். இதனை ஆரம்பப் புள்ளி என்றே கூறலாம்.

அரசியல்

இன்னும் பெரும் தூரம் இதில் நடக்க வேண்டியுள்ளது. சந்திரிகா இது விடயத்தில் தமது இலக்கை அடைவதற்கு முன் அடிக்கடி கல், முள், புதர், அரசியல் பொறிக்கிடங்கு, அரசியல் கண்ணிவெடி என்று பல தடைகளையும் தாண்ட வேண்டிய கஷ்டமுண்டு.

தமிழ் மக்களின் தன்னாட்சிக் கோரிக்கை, தெற்கின் சிங்கள பேரினவாத சக்திகளின் எதிர்ப்பு, இராணுவத்தின் முரண்டுத்தனம் ஆகிய மூன்றுக்கும் இடையில் சிக்குப் பட்டுள்ள சந்திரிகா வளைந்து, நெளிந்து, சுளித்து, சமாளித்தே தனது இலக்கை அடைய நேரிடும். அதாவது பல தடைகளைத் தாண்டி ஓடவும், பல சூழ்ச்சிகள், சூக்குமங்கள் என்பனவற்றை எதிர்கொள்ள வேண்டியும் நேரிடும். அதற்கு சளைப்பும், சலிப்பும் இருக்கக் கூடாது. அதே வேளை நீதியையும், நியாயத்தையும் சார்ந்து செயற்படவும் வேண்டும்.

சந்திரிகாவுக்கு அதற்கான வல்லமை, திறமை, சாதுரியம் அரசியல் சாணக்கியம் உண்டா என்பது போகப் போகத்தான் தெரியும். ஒன்றை நீக்க புதிதாக இன்னொன்று வரும் என்ற இடியப்பச் சிக்கலாக உள்ளது இப்பிரச்சினை. சம்பந்தப்பட்ட சகல தரப்புகளையும் விட்டுக்கொடுக்கும் வழிக்குக் கொண்டு வரவும் அவற்றுக்கு கொடுத்து எடுக்கும் பழக்கத்தை ஊட்டவும் சந்திரிகாவினால் இயலுமானால் மட்டுமே அவரால் இதில் வெற்றி காணமுடியும்.

### பொருளாதாரக் கொள்கை

பஞ்ச விடயத்தில் அடுத்தது பரந்த அளவில் பயன்தரக் கூடிய மனித முகம் கொண்ட திறந்த பொருளாதார அமைப்பு. அரசியல் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும், அவர்களின் தரகர்களுக்கும், இந்த இரு தரப்பினரதும் பங்குதாரர்களுக்கும் பயனளிக்கும் பொருளாதாரமாக அன்றி, சமூகத்தின் அடிமட்டத்தினருக்கும் பயன்தரக்கூடிய திறந்த பொருளாதாரத் திட்டத்தைக் கொண்டு வருவதே அரசாங்கத்தின் நோக்கம் என அறிவிக்கப்பட்டது. ஆனால் இது விடயத்தில் இன்னமும் அரசு தெளிவை ஏற்படுத்தவில்லை.

## அதற்குள் ஜனாதிபதி தேர்தல் அறிவிப்பும் வந்து விட்டது

சுதந்திர வர்த்தக வலயத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஊழியர்கள் நடத்திய வேலை நிறுத்தம், திறந்த பொருளாதாரத் திட்டத்தை புதிய அரசாங்கம் எவ்வாறு நடைமுறைப் படுத்தப் போகிறது என்ற ஒரு சந்தேகத்தை வெளிநாட்டு முதலீட்டாளர் மத்தியில் தோற்றுவித்தது.

வேலை நிறுத்தம் என்ற சொல்லே வெளிநாட்டு முதலாளிக்கு ஒவ்வாமை (Allergy) கொடுப்பதாகும். சுதந்திர வர்த்தக வலயத் தொழிற்சாலைகளில், நடந்த வேலை நிறுத்தத்தை அவதானித்த பல முதலீட்டாளர்கள், புதிய அரசின் கீழ் இது அடிக்கடி நடக்கும் சம்பவமாக மாறலாம் என்று ஊகித்து, தமது முதலீடுகளை வியட்நாமுக்கு மாற்ற முனைந்தார்கள் என்ற தகவலும் உண்டு. ஆனால் சந்திரிகா தமது திறமையால் அப்படி ஒரு நிலை ஏற்படாமல் தடுத்து விட்டார்.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மட்டுமன்றி, உள்நாட்டு வர்த்தகர்கள், முதலீட்டாளர்கள், கைத்தொழில் அதிபர்கள் ஆகியோரும் அரசு தனது பொருளாதாரக் கொள்கையை அதன் நடைமுறை விவரங்களைத் தெளிவாக வெளியிட்டு, இப்போதுள்ள மயக்க நிலையை, குழப்பமான சூழலை நீக்குமாறு குரல் கொடுத்துள்ளனர்.

மக்கள் மயப்படுத்தப்பட்ட நிறுவனங்களை அரசு திருப்பி எடுக்குமா? நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை தனியாரிடம் ஒப்படைக்குமா அல்லது அரசு சுவீகரிக்குமா? லாபத்தில் நடைபெறும் அரச நிறுவனங்கள் தனியாரிடம் ஒப்படைக்கப்படுமா என்பது குறித்து அமைச்சர்களே வெவ்வேறு முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்:

இதனால் அரசு தனது பொருளாதாரக் கொள்கையையும், நடைமுறையையும் தெளிவுபடுத்த வேண்டிய தேவை உண்டு;

அடுத்த விடயம் அரசமைப்பில் மாற்றம் கொண்டு வருவதாகும். பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, தனதுதேர்தல் விஞ்ஞாபனத்தில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவது விகிதாசாரத் தேர்தல் முறையை மாற்றுவது உட்பட, அரசமைப்பில் மாற்றம் கொண்டு வருவது குறித்துப் பெரிதாகப் பேசியது.

ஆனால் இப்போது, நவம்பர் ஒன்பதாம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரே அது விடயத்தில் கவனம் செலுத்துவதாகக் கூறுகிறது. நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை அரசமைப்பு மாற்றத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பாகக் கொண்டு, அதன் பின்னர் அரசமைப்பில் மாற்றம் கொண்டு வருவதே அரசின் புதிய உத்தேசம்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டு விட்டதால், அரசமைப்பை மாற்றும் விடயத்தில் அரசாங்கம் தேர்தல் முடிந்த பின்னர் என்ன சொல்லும்,

**உதயகாந்தன்**

செய்யும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் அதற்கான நடவடிக்கைகளை அரசு உற்று ஆழமாகத் தொட்டுள்ளது எனலாம்.

தென்னிலங்கையில் அவசரகாலச்சட்டத்தை நீக்கியமை, தடுத்து வைக்கப்பட்டுள்ளோரில் குற்றம் புரிந்ததற்கான சாட்சியம் இல்லாதோரை விடுவிப்பது. இதற்கென ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையில் ஐந்து அங்கத்தவர் குழுவை நியமித்தமை ஆகியன நடைமுறைக்கு வந்திருப்பவை ஆகும்.

அரச நிர்வாகத்திலிருந்து ஊழலையும் மோசடியையும் ஒழிக்கும் விடயத்தில் அரசாங்கம் அக்கறையாகச் செயற்பட்டு வருகிறது. இது சம்பந்தமான சட்டங்கள் நாளை மறுதினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சர்கள், எம்.பிக்கள் மட்டுமன்றி அவர்களின் மனைவி, மக்களும் தமது சொத்து விவரங்களை வெளியிட வேண்டும் என்ற அளவுக்கு அது கடுமையானதாக உள்ளது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்டால் லஞ்சம், ஊழலை ஓரளவு தடுக்க முடியும் என நம்பலாம்.

### கனவுகாண முடியாதளவு ஊழல்

கடந்த அரசாங்க காலத்தில் அரச துறையில் பெருச்சாளியாக ஊழல் தாண்டவமாடியதால், தாம் கனவு காண முடியாத அளவுக்கு மோசடிகள் இடம் பெற்றதை நாளாந்தம் கண்டுபிடிக்க முடிகிறது என்று நீதி அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

நிதி மோசடிகள், கையாடல்கள், ஊழல்கள் என்பனவற்றினால் திறைசேரிப் பெட்டகங்கள் வெறுமை கண்டிருப்பதாகப் பிரதமர் கூறுகிறார். ஆனால் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட சமூகநலத் திட்டங்களைவிட, புதிதாக எதனையும் இப்போது தயாரிக்க வேண்டாம் என்றும், அரசாங்கம் மூலதனமிடும் திட்டங்களை இப்போதைக்கு வகுக்க வேண்டாம் என்றும் பிரதமர் சந்திரிகா தமது அமைச்சர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இத்தகைய தொட்ட குறை, விட்ட குறை நிலையில் சந்திரிகா அரசின் ஒரு மாத ஆட்சி இன்று முடிகிறது. அதற்கிடையில் நவம்பர் மாதம் ஒன்பதாம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறப்போகிறது என்ற அறிவிப்பு வந்துவிட்டது.

அரசாங்க கட்சியின் வேட்பாளராக சந்திரிகாவும், ஐ. தே. க வேட்பாளராக காமினி திஸநாயக்காவும் போட்டியிடுவர். ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்திருக்கும் ஒஸி அபயகுணசேகரா, ஜே. வி. பி. மற்றும் ரெலோ வேட்பாளர்களும் ஜனாதிபதி தேர்தல் களத்தில் குதிக்க இருப்பதாகத் தகவல்கள் உள்ளன.

புதிய அரசாங்கத்தின் ஒரு மாத ஆட்சி நிறைவுறும் கையோடு மற்றொரு தேர்தல் அமளி தொடங்குகிறது. 40 கோடி ரூபா செலவில் நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலை தொடர்ந்து இரண்டொரு மாதங்களில் பொதுத் தேர்தல் வரலாம். இவ்வாறு தேர்தலிலேயே பணத்தையும், காலத்தையும் செலவிட்டால் நாடு முன்னேறுவது எப்படியோ? பிரச்சினைகள் தீர்வது எப்போதோ? அரசியல்வாதிகளின் நன்மைக்காக மக்கள் நசிந்து, நலிய வேண்டியது தானா?. மக்கள் நலமுறுவதற்கு வெகுதூரம் தானா?. ★

## புலிகள் மீது வாழப்பாடி குற்றச்சாட்டு

சென்னை, செப். 18

தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்களைக் கடத்துவதில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டு வருகிறார்கள் என்று தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் குறித்து மாநில முதலமைச்சரும், காவல் துறையினரும் உண்மை நிலையைத் தெரிவிக்கவில்லை என்றும் அவர் கூறினார். [இ-4]

ஞாயிறு கதம்பம் உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

## அமெரிக்கா தலைமையிலான..

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட, ஹெய்டி இராணுவ ஆட்சியாளர்களின் கைப்பொம்மையான ஆட்சி மன்றம் ஒன்று ஓய்வு பெற்ற நீதியரசரான எமைல்ஜொனசெய்ட் (Emile Jonassaint) என்பவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தது.

1995 பெப்ரவரியில் ஹெய்டியில் மீண்டும் தேர்தல் நடத்தவும் இராணுவ ஆட்சியாளர்கள் திட்டமிட்டிருந்தனர்.

புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு அரிஸ்ரைட் தேர்தலில் போட்டியிடுவதற்கு தடையும் விதிக்கப்பட்டது.

இப்படியான நிலையிலேயே ஹெய்டி இராணுவ ஆட்சியாளர்கள் பதவி துறக்கமாட்டார்கள் என்ற முடிவுக்கு அமெரிக்கா வந்தது.

### ஹெய்ட்டியின் வரலாறு

கத்தோலிக்க மதத்தவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஹெய்ட்டி அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் இருந்து அத்லாண்டிக் சமுத்திரத்தில் தென் கிழக்கே 960 கிலோ மீற்றர் தொலைவிலுள்ளது.

இதன் தலைநகரம்போர்ட் ஒவ்பிரின்ஸ் [Port - Au - Prince]

கோப்பியை பிரதான ஏற்றுமதிப் பொருளாகக் கொண்ட ஏழை நாடு இது பிரெஞ்சு மொழி இதன் உத்தியோக பூர்வ மொழி.

பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் முன்பு இருந்த ஹெய்ட்டி நீண்ட காலம் புரட்சிகளாலும் அரசியல் படுகொலைகளாலும் சீரழிந்து வந்தது.

1957 ஆம் ஆண்டில் பிராங்கொய்ஸ் டுவாலியர் [Francois Duvalier] ஹெய்ட்டியில் ஆட்சியைக் கைப்பற்றினார். தனக்கென்று ஒரு சொந்த இராணுவத்தையே அமைத்து அரசியல் எதிரிகளை அவர் ஒழித்துக்கட்டினார்].

1957 இல் ஏற்படுத்தப்பட்டு 1964 இலும் 1971 இலும் திருத்தப்பட்ட புதிய அரசமைப்பின்படி பிராங்கொய்ஸ்டுவாலியர் ஆயுட்கால ஜனாதிபதியானார்.

1971 ஆம் ஆண்டு இவர் மரணமாகும் வரை ஹெய்ட்டி டுவாலியர் குடும்பத்தின் கொடுங்கோல் ஆட்சியின் கீழ் இருந்தது.

1971 இல் பிராங்கொய்ஸ் டுவாலியர் மரணமாகி அவரது மகன் ஜீன்குளோட் டுவாலியர் [Jean Clude Duvalier] ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்

இவரது ஆட்சிக்கு எதிரான ஜனநாயக சக்திகளின் கைகளே ஜீன்குளோட் டுவாலியர் 1986 இல் ஹெய்ட்டியை விட்டு வெளியேறினார்.

### டுவாலியர் ஆட்சிக்காலத்தை ஏற்படுத்த முயற்சி

1991 புரட்சியின் போது ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவ ஆட்சியாளர் செட்ராஸ் ஹெய்ட்டியில் மீண்டும் பிராங்கொய்ஸ் டுவாலியர் ஆட்சிக் காலத்தை உருவாக்க முயற்சிக்கிறார் என்றே கருதப்படுகிறது.

டுவாலியரிடம் இருந்தது போன்று செட்றாஸிடமும் தற்போது தனியான இராணுவ அமைப்பு ஒன்று இயங்கி வருகிறது.

பன் நாட்டுப்படைகள் செட்றாஸைப் பதவி கவிழ்த்தாலும் அரிஸ்ரைட் ஆட்சிக்கு இந்த ரகசிய இராணுவ அமைப்பு தொடர்ந்து சவாலாகவே இருக்கப்போகிறது.

சிலசமயம் ஹெய்ட்டி இராணுவ ஆட்சியாளர் செட்றஸ் அமெரிக்காவுடன் இறுதி நேரத்தில் சமரசம் ஒன்றுக்கும் வரலாம். அல்லது ஹெய்ட்டியில் இருந்துவெளியேற இணங்கலாம்.

அப்படி நடந்தாலும் அந்த முடிவும் அமெரிக்காவின் தலையீட்டை இனி நிறுத்திவிட முடியாது ஏனெனில் அரிஸ்ரைட்டை மீண்டும் பதவியில் அமர்த்தும் பெரும் பொறுப்பு அமெரிக்காவிடம் உண்டு.

இதற்கிடையில் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் ஹெய்ட்டிக்கு சமாதானத் தூதுசெல்ல உள்ளதாக நேற்று கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

1979 இல் காம்ப்டேவிட் ஒப்பந்தம் மூலம் எகிப்தையும் இஸ்ரேலையும் சமாதானம் செய்து வைத்த கார்ட்டர் 1994ஜூனில்வடகொரிய அணுசக்தி ஆலைப் பிரச்சினையின் போதும் கொரிய தீபகற்பத்துக்கு சமாதானத் தூது சென்று நெருக்கடி நிலை தணிய உதவினார்;

கடைசி நேரத்தில் கார்ட்டர் மேற்கொண்டுள்ள சமாதான முயற்சி வெற்றிபெறுமானால் ஹெய்ட்டியில் பெரும் இரத்தக்களரி தவிர்க்கப்படும். ★

## இந்த மண்ணின் மகத்துவம்



அகிம்சைப் போருக்கு
இலக்கணம் வகுத்தவன்
அரசியல், தேச எழுச்சிக்கு
உயிரீந்தவன் 'திலீபன்'
உருவில் பார்த்திபன்.

அகிம்சைப் போருக்கு
வழி காட்டியவர்
என்றோ வாழ்ந்த
இயேசுவும் புத்தரும்
அது வரலாறு.

அகிம்சைப் போருக்கு
அர்த்தம் படைத்தவர்
இந்த நூற்றாண்டில்
இந்திய காந்தியும்
அமெரிக்க லூதரும்
ஆங்கில பொபிசாண்ட்சும்.

காந்தியைப் பெற்று
பெரிதும் உவந்தது
இந்திய நாடு.
திலீபனைப் பெற்றதால்
பெரிதும் உவந்தது
எம் தமிழீழம்.

காந்தி பிறந்ததும்
வாழ்ந்து மறைந்ததும்
இந்திய மண்ணில்
கனவாய் போனது.
காந்திய ஆயுதம்
ஏந்திய திலீபன்
எங்கள் இதயத்தில்
வாழ்ந்து கொண்டிருப்பது
இந்த மண்ணின்
மகத்துவம்.

எஸ். பி. கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகி திலீபன் நினைவாக இன்றைய இரவு நிகழ்வுகள்

தியாகி திலீபனின் 7 ஆம் ஆண்டு நினைவினை ஒட்டி கோட்ட ரீதியாக உண்ணாவிரதப் பந்தல்களில் நடைபெற்றுவரும் நிகழ்வுகளில் இன்று முதல், இரவு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. நிகழ்வுகள் இரவு 7-30 மணிக்கு ஆரம்பமாகும்.

இன்று நடைபெறவுள்ள நிகழ்வுகளின் விவரம்வருமாறு:

வலிகாமம் கோட்டம்

★ கன்னாகம் சிவன் கோவிலடியில் —தவில் நாதஸ்வரம், கரகம், கும்மி "மரணத்தை வென்றவர்கள்" நாடகம்.

★ வடக்கம்பரை அம்மன் கோவிலடியில்— தவில் நாதஸ்வரம், 'தமிழ் மண்' நாடகம் மீனவ நடனம்.

★ ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலடியில் — பட்டிமன்றம், பேச்சு, 'சமாதியின் சந்நிதி' நாடகம் கும்மி.

★ நீர்வேலி கந்தசுவாமி கோவிலடியில் — கவியரங்கு, "விடிவிற்காய் விரைந்தவர்கள்" நாடகம், காவடி.

★ நல்லூர் கந்தசுவாமி கோவிலடி — கவியரங்கு. பேச்சு, 'சிறை' நாடகம் கும்மி கரகம்.

தீவகக் கோட்டம்

★ அல்லைப்பிட்டி நாச்சிமார் கோவிலடி —'பாசமுடிவு' நாடகம் கிராமிய நடனம், கும்மி.

வடமராட்சி கோட்டம்

★ உடுப்பிட்டிச் சந்தி வைரவர் கோவிலடியில் — பேச்சு, கோலாட்டம், கும்மி, 'துரம் அதிகமில்லை'' நாடகம்.

★ மந்திகை அம்மன் கோவிலடியில் — பேச்சு "கலைஞனின் தாகம்'' நாடகம், கும்மி கோலாட்டம்.

★ துன்னாலை கலிகைக் கந்தன் ஆலய முன்றலில் — 'தர்மதேவதை' நாடகம், கும்மி, கோலாட்டம்.

தென்மராட்சி கோட்டம்

★ கொடிகாமம் சந்தி — பேச்சு கயிற்றுக் காவடி, "புதிதாய் எழுவோம்'' நாடகம், கரகம்.

★ சாவகச்சேரி மணிக்குணராப் பிள்ளையார் கோவிலடியில் — பேச்சு, கரகம். கோலாட்டம், "புலரும் பொழுது'' நாடகம்.

★ கொடிகாமம் இராமாவில் நுணாவில் அம்மன் கோவிலடியில் — பேச்சு, வயலின் இசை 'தமிழ்த் தாய்' நாடகம் கோலாட்டம்.

பேச்சு. "தரும உபதேசம்'' நாடகம், "தாகம்'' நாடகம் கும்மி. (ஐ)

## சைவநெறி தேர்வு பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம், செப். 18

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் நடத்தப்படும் அகில இலங்கைப் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

சைவபரிபாலனசபைத் தலைவர் திரு. இ. மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் மில்க்வைற் அதிபர் திரு. கனகராசா மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைப்பார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீ லஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அருளுரை வழங்குவார். கல்விப்பணிப்பாளர் செல்வி. பெரியதம்பி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்குவார்.

கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை "சமயவாழ்வு'' என்ற பொருளில் உரையாற்றுவார். (க-17)

## ஆலயங்களில்

நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய இரதோற்சவ தின வழிபாடு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கச்சேரி — நல்லூர் வீதியிலிருக்கும் புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும். (ஐ)


## பின்போடப்பட்டுள்ளது
### தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் அவை

சஞ்சிகை வெளியீட்டு நிதிக்காக மாணவர் அவையால் 18-09-1994 ஞாயிறு நடத்தப்படவிருந்த மாபெரும் கலைநிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம். கலைநிகழ்ச்சி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

— மாணவர் அவை,

தொழில் நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
கொக்குவில். [32941]



## கண்ணீர் அஞ்சலி

யாழ்/ அரசினர் பொது வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை நிபுணராகக் கடமைபுரிந்த வைத்திய கலாநிதி

டாக்டர்

### சுப்பிரமணியம் பொன்னம்பலம்

அவர்கள் 16. 09. 94 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார். அன்னாரின் மறைவையொட்டி யாழ்/ அரசினர் பொது வைத்தியசாலையைச் சேர்ந்த நாம் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வைத்தியர்கள்
ஊழியர்கள்
யாழ்/மருத்துவ சங்கம்.

(சி/9144)



## கண்ணீர் அஞ்சலி

சொந்த மண்ணுக்கும் மக்களுக்கும்
தன் நிபுணத்துவ ஆற்றலை முழுமையாக அர்ப்பணித்துக்
காலத்தின் தேவையறிந்து கற்பனைக்கெட்டா வகையில்
கடமையைச் செய்த

பிரபல சத்திரசிகிச்சை நிபுணரும்
யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடப்
போதனாசிரியருமாகிய

### Dr. சுப்பிரமணியம் பொன்னம்பலம்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டி
இவரைப் புகழ்பூத்த பழைய மாணவராகப் பெற்ற
இளவாலை
மெய்கண்டான் மகா வித்தியாலயத்தினர்
ஆகிய நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.
பழைய மாணவர், பா. அ. சபையினர்.

மெய்கண்டான் ம. வி.
(இளவாலை)
மாவிட்டபுரம். (32942)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 328/1 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 18 09 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# டாக்டர் பொன்னம்பலம் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு

## அஞ்சலிக் கூட்டத்தில் டாக்டர் கணேசரட்ணம்

யாழ்ப்பாணம், செப். 18

டாக்டர் எஸ். பொன்னம்பலம் யாழ். போதனா வைத்திய சாலைக்கும் பொதுமக்களுக்கும் அளப்பரிய சேவைகளை ஆற்றி உள்ளார். அவரின் மரணம் யாழ். போதனா வைத்திய சாலைக்கும் பொது மக்களுக்கும் பேரிழப்பாகும்.

யாழ். போதனா வைத்திய சாலையில் கடந்த 17 வருடங்கள் சத்திரசிகிச்சை நிபுணராகக் கடமை ஆற்றிய டாக்டர் எஸ். பொன்னம்பலத்தின் மறைவு குறித்து நேற்று யாழ். போதனா வைத்திய சாலை, விரிவுரை மண்டபத்தில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் டாக்டர் எம். கணேசரட்ணம் மேற்கண்டவாறு கூறினார்.

"டாக்டர் பொன்னம்பலம் மருத்துவ பீட மாணவர்களின் கல்வியில் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். சிகிச்சைக்காக கொழும்பு செல்ல முன்னரும் மாணவர்களுக்கான அனைத்து விரிவுரைகளையும் முடித்துவிட்டே சென்றார்.''

இப்படி டாக்டர் கணேசரட்ணம் மேலும் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். பி. ஆர். சிவமாறன் பேசுகையில், இன்றைய நெருக்கடியான போர்க்கால சூழ்நிலையில் ஒரு சத்திர சிகிச்சை நிபுணரின் சேவை எவ்வளவு பெறுமதியானது என்பதனை நாம் அனைவரும் அறிவோம்.

எனவே இந்த நேரத்தில் நாம் ஒரு திறமையான உறுதியான சத்திரசிகிச்சை நிபுணரை இழந்திருப்பது யாழ். போதனா வைத்தியசாலைக்கும் மருத்துவ பீடத்திற்கும் மட்டுமல்ல முழு தமிழ் சமுதாயத்திற்குமே பேரிழப்பாகும்.

(மேலும் 1987 ஒக்டோபரில் இந்திய அமைதிப்படை யாழ். போதனா வைத்திய சாலையில் பலரைக் கொன்றொழித்தபோதும், மனம் தளராமல் யாழ். போதனா வைத்தியசாலை மூடப்படாமல் தொடர்ந்து இயங்க உறுதியுடன் பாடுபட்டவர் என்றார்.

டாக்டர் எஸ். ஜெயபாலசேகரன் பேசுகையில் "டாக்டர் பொன்னம்பலம் மிகவும் இரக்க குணம் படைத்தவர். பல ஏழைப் பிள்ளைகளுக்கு நிரந்தர வைப்பில் பணம் போட்டுக் கொடுத்திருக்கிறார்'' என்றார்.

மாணவர் பிரதிநிதி திரு. சோமஸ்காந்தன் பேசுகையில் இங்கு பட்டம் பெற்றதும் பறந்து செல்பவர்களைப்போலன்றி இங்கேயே சேவை செய்த டாக்டர் எஸ். பொன்னம்பலத்தின் மறைவு மருத்துவபீட மாணவர்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு'' என்றார்.

இந்த அஞ்சலி நிகழ்வு, பதில் பணிப்பாளர் டாக்டர் திருமதி ஆர். இராஜஇராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

அஞ்சலி தீபத்தை வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். ஆனந்தராஜா ஏற்றிவைத்து. டாக்டர் பொன்னம்பலத்தின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்தார்.

இந்த வைபவத்தில் தாதியர் சார்பாகவும் — அலுவலக ஊழியர்கள் சார்பாகவும் — மேற்பார்வையாளர் சார்பாகவும் — மற்றும் சிலரும் உரை நிகழ்த்தினர். (இ)


யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

### விஞ்ஞானபீடம்

இரண்டாம்
அரையாண்டு
பரீட்சைகள்
1992/93

மேற்படி பரீட்சைகள் 1994 நவம்பர் மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகும்.

இப் பரீட்சைகளுக்குரிய விண்ணப்பிக்கத் தகுதியாய்ந்த விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களை யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் பெற்று 15-10-94க்கு முன்பாக சமர்ப்பித்தல் வேண்டும். மேலதிக விவரங்களிற்கு முத்திரை ஒட்டிய 23cmX10cm அளவுள்ள தபாலுறையினை சிரேஷ்ட உதவிப் பதிவாளர் பரீட்சைக் கிளை என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

-பதிவாளர்.

(சி-9139)


## பொது வைத்திய தாதிகள் சங்கம் அஞ்சலி தெரிவிப்பு

யாழ். போதனா வைத்திய சாலை சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். பொன்னம்பலத்தின் மறைவையொட்டி பொதுவைத்திய தாதிகள் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அறிக்கையின் விவரம் வருமாறு:

வைத்திய உலகிலே முன்னோடியாகத் திகழ்ந்து தாய் மண்ணிலேயே தனது இறுதிக் காலம்வரை சேவையாற்றி எம்மை விட்டுப் பிரிந்த சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். பொன்னம்பலம் அவர்களின் மறைவையொட்டி பொது வைத்திய தாதிகள் சங்கம் ஆழ்ந்த கவலை அடைகிறது.

இன்றைய இக்கட்டான சூழ்நிலையிலே எத்தனையோ வசதிகள் இருந்தும் அவற்றையெல்லாம் தூக்கி வீசிவிட்டு தான் பிறந்த மண்ணுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற அரிய நோக்கோடு தன் நோயையும் பாராது இறுதிக்காலம் வரை தமிழ மக்களுக்கு சேவை புரிந்த சேவையாளன்.

முக்கியமாக அந்நியநாட்டுப் படையினர் ஆக்கிரமிப்பில் இருந்த வேளை யாழ். போதனா வைத்தியசாலையில் நடந்த கொடூரங்கள் எம் அனைவருக்கும் தெரியும்.

அந்த அவர்த்தங்கள் மத்தியிலும் தனது துணிவாலும் சேவை மனப்பான்மையினாலும் அங்கு அகப்பட்டிருந்த சக ஊழியர்களுக்கு மனத்தைரியத்தை ஊட்டி வைத்திய சாலையை மீளவும் திறந்த பெருமை இத் தலைவனுக்கே உரியதாகும்.

அந்த நெருக்கடியான காலத்தில் தனது குடும்பம் என்ற குறுகிய வட்டத்துக்குள் மட்டும் நின்றுவிடாது சேவை என்பதற்கு அர்த்தம் கற்பித்து காயப்பட்ட மக்களுக்கு சேவையாற்றிக் கொண்டிருந்தார்.

என்றும் புன்சிரிப்பும் புதிய உத்வேகமும் நேரம் தவறாமையும் இவரது நற்பண்புகளாகும். சக ஊழியர்களின் இன்ப துன்ப நிகழ்வுகளிலே தானும் ஒருவனாக மாறி விடும் எளிமை மிக்கவர். நோயாளர் பராமரிப்பு என்பது தனி ஒருவரின் செயற்பாடல்ல. அது ஒரு குழு முயற்சி என்ற உண்மையை அடிக்கடி கூறும் இவர் சக ஊழியர்களோடு அன்பாகவும் பண்பாகவும் பழகி தனது பணியை மேன்மையடையச் செய்தார்.

இவ்வாறு நற்பண்புகளையும் தாய்நாட்டுக்கே சேவையாற்ற வேண்டும் என்ற எண்ணத்தையும் கொண்ட இப் பேராசான் இன்று எம்மத்தியில் இல்லை இவரது இழப்பு எமக்கு மட்டுமல்ல தமிழ் மண்ணுக்கே பேரிழப்பாகும்.

அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


ஏழாலை தெற்கு வசந்தபுரம்

## வசந்த நாகபூஷணி அம்பாள் இலட்சார்ச்சனை [21 தினங்கள்] பூர்த்தி விழா

### 19-09-1994 [திங்கட்கிழமை]

சிவஸ்ரீ து. தி. செங்காதரக்குருக்கள்

புன்னாலைக்கட்டுவன் அவர்கள் தலைமையில் பூர்த்திவிழா இடம்பெறும்.

சிவஸ்ரீ மகாதேவக்குருக்கள்

அவர்கள் தலைமையில் குருகுல மாணவர்கள் வேதபாராயணத்தை நடத்திவைப்பார்கள்.

காலை 6.00 மணிக்கு விழா ஆரம்பமாகி பி. ப. 2 மணிவரை இடம்பெறும். முற்பகல் 11.00 மணிக்கு பஞ்சதண்டயாகம் 1008 சங்காபிஷேகம் இடம்பெறும். நண்பகல் 12.00 மணிக்கு பூஜை, அதனைத் தொடர்ந்து 1.00 மணிக்கு காவடி, கற்பூரச்சட்டி, பறவைக் காவடி, பால் செம்பு, அங்கப் பிரதிஸ்டை ஆகியன இடம் பெறும்.

சொற்பொழிவு நிகழ்த்துபவர்கள்:

வாகீச கலாநிதி K. நாகேஸ்வரன் M. A.
தமிழருவி த. சிவகுமாரன் (ஆசிரியர்)
திரு. குமாரசாமி அவர்கள்

பிற்பகல் 2 மணிக்கு மகேசுர பூசையுடன் விழா பூர்த்தியாகும்.

★ பாதுகாப்பு ஒழுங்கு நடவடிக்கைகள் திரு. அருந்தவராசா தலைமையிலான கீழ்ப்பசன ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் மேற்கொள்வார்கள்.

வசந்தபுரம் வசந்த நாகபூஷணி
அம்மன் தேவஸ்தானம்
வசந்தபுரம், ஏழாலை,

[32943]


## வல்லிபுர ஆழ்வார் கோவில் தேர்த் திருவிழா

சரித்திரப் பிரசித்தி பெற்ற பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா இன்று காலை நடைபெறுகிறது.

இன்று காலை 8 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து சுவாமி தேரேறி வீதிவலம் வருவார்.

நாளை திங்கட்கிழமை சமுத்திர தீர்த்தமும், செவ்வாய்க்கிழமை நன்னீர்த் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (அ-173-15)

## முழுநிலா கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு பிரதேச சபையும் அதன் சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடத்தும் முழுநிலா அறிவியற் கருத்தரங்கு, நாளை திங்கள் மாலை 4 மணிக்கு சுன்னாகம் பெரிய மதவடி பொது நூலக மண்டபத்தில் நடைபெறும்.

"புதிய அரசின் அரசியல் பொருளாதாரத் திட்டங்கள்'' எனும் விடயம் பற்றி திரு. மு. திருநாவுக்கரசு கருத்துரை வழங்குவார். (த)

சந்திரிகாவை–

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது.

ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் மக்களின் வாக்குகள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளரான பிரதமர் சந்திரிகாவுக்கு இடைக்காமல் செய்வதற்காக—

தமிழரின் வாக்குகளைப் பிரிக்கும் எண்ணத்துடன் ரெலோவை தேர்தல் களத்தில் ஐ. தே. க. தலைமைப் பீடம் குதிக்க வைத்திருக்கலாம் என சில அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

எனினும் இத்தேர்தலில்—

இ. தொ. கா. மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை ஆதரிப்பதால் அந்த முன்னணியின் வேட்பாளரான பிரதமர் சந்திரிகா குமாரதுங்க முதல் சுற்று வாக்குகளிலேயே— பல லட்சம் வாக்குகள் பெரும்பான்மையுடன்— வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கலாம் என்று அவதானி ஒருவர் குறிப்பிட்டார்.

தற்போதைய ஜனாதிபதியான டி. பி. விஜேதுங்கா இத் தேர்தலில் போட்டியிட விரும்பாது ஒதுங்கிக் கொண்டுள்ளார் என்பது தெரிந்ததே. எதிர்வரும் ஜனவரி மாதம் இறுதிவரை அவர் பதவியில் இருப்பார்.

புதிய ஜனாதிபதி பெப்ரவரி 4 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதவி ஏற்பார். (உ)

ஜனாதிபதித்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு முந்திய தினமான ஒக்டோபர் 6 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை கட்டுப்பணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளை சேர்ந்த வேட்பாளர்கள் தவிர்ந்த ஏனையோர் நாடாளுமன்றத்திற்கு தற்போது தெரிவு செய்யப்பட்டவர்களாக அல்லது முன்னர் தெரிவு செய்யப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் விடுத்த அறிக்கை கூறுகிறது.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட்ட சான்றுப் பத்திரம் ஒன்றை இத்தகைய வேட்பாளர்கள் சமர்ப்பித்தால் மாத்திரமே அவர்களிடமிருந்து கட்டுப்பணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு 9 ஆயிரத்து 579 வாக்குச் சாவடிகளில் நடைபெறும். பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் 1 கோடி 9 லட்சமாகும்.

நவம்பர் மாதம் ஒன்பதாம் திகதி நடைபெற இருப்பது மூன்றாவது ஜனாதிபதித் தேர்தலாகும். இதற்கு முன்னர் 1982 ஆம் ஆண்டும் 1988 ஆம் ஆண்டும் ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெற்றன என்பது தெரிந்ததே. (உ-க-4)

## கட்டுத்துப்பாக்கி வெடித்து காயம்

யாழ்ப்பாணம், செப். 18

கட்டுத்துப்பாக்கிக்கு வெடிமருந்தை வைத்த இறுக்கியபோது அது வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்தார்.

பளை, புலோப்பளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த எ. இருச் செல்வம் (வயது30)என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [ஐ-15]

டாக்டர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யெபடி மக்களுக்கும் போராளிகளுக்கும் அவர் ஆற்றிய மருத்துவசேவை போற்றுதற்கு உரியது.

இந்தியப் படையினரால் யாழ்ப்பாணம் முற்றுகையிடப்பட்டு யாழ் வைத்திய சாலையில் படுகொலை நடைபெற்றவேளைகளில் எல்லாம் தன் உயிரைக் கூட பொருட்படுத்தாது தொடர்ச்சியாக அங்கேயே கடமை புரிந்திருந்தார்.

அதேபோல இரண்டாவது ஈழப்போர் தொடங்கிய வேளையில் வைத்தியர்கள் இல்லாது யாழ் மருத்துவமனை மூடப்பட்ட வேண்டிய சூழல் ஒன்று எழுந்தபோதும் அதனை மூடவிடாது அது தொடர்ச்சியாக இயங்க வேண்டும் என்பதில் உறுதியுடன் இருந்து அதில் வெற்றியும் கண்டார்.

66 வயதைக் கடந்துவிட்ட நிலையிலும்—

சேவை மூப்படைந்த போதும்— தனது நோயையும் பொருட்படுத்தாது அவர் செய்த மருத்துவப் பணியை இந்த மண் என்றும் மறக்க மாட்டாது.

வைத்திய கலாநிதி பொன்னம்பலம் அவர்களின் பிரிவை எண்ணித் துயருறும் அவரது குடும்பத்தின் வேதனையில் எமது மக்களுடன் நாமும் பங்கு கொள்கிறோம்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் பொன்னம்பலம் அவர்கள் 1928 ஆம் ஆண்டு கரம்பனையில் பிறந்தார்.

1957 ஆம் ஆண்டு மருத்துவராக பட்டம் பெற்று கடமைப் பயிற்சியை ஆரம்பித்தார்.

இங்கிலாந்தின் எடின்பரோ பல்கலைக்கழகத்தில் எவ். ஆர். சி. எஸ். பட்டம் பெற்று சத்திர சிகிச்சை நிபுணராக் கடமை புரிந்த அவர் 1976 ஆம் ஆண்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு கடமையாற்ற வந்தார்.

அன்றிலிருந்து தொடர்ச்சியாக 94 ஆம் ஆண்டு வரையிலான 18 ஆண்டுகள் யாழ். போதனா வைத்தியசாலையில் தன்னை அர்ப்பணித்து கடமை புரிந்தார்.

இவர் 1991 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மருத்துவ பீடத்தின் சத்திரசிகிச்சைத்துறைத் தலைவராக பதவி வகித்தார்.

யாழ் மருத்துவ சங்கத்தின் முன்னாள் தலைவராகவும், ஜெய்ப்பூர் செயற்கை கால் நிறுவனத்தின் ஆலோசகராகவும் விளங்கினார். [இ 4]

திலீபனின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் சிறப்பாக நேற்று நடைபெற்றன. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பொது நிறுவனங்களைச் சார்ந்தோர் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்

வடமராட்சி வடக்கு கடற்புலிகளின் அரசியல் பிரிவினர் ஏற்பாடுசெய்துள்ள உண்ணாவிரத நிகழ்ச்சி இன்று வல்வை நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவிலடியில் இடம்பெறவுள்ளது.

வலிகாமத்தின் பல்வேறு இடங்களிலும் மேலும் பல இடங்களில் நினைவுப் பந்தல்களை மக்கள் அமைத்து வருகின்றனர்.

சாவகச்சேரி நகரப்பகுதியில் பல நிலைபத்தில் அமைக்கப்பட்டுள்ள அலங்காரப் பந்தலில் திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டுள்ளது. தென்மராட்சியின் பல பகுதிகளிலும் அலங்கார வளைவுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

(ஐ-13-15-17-31-89-155-173)

அரசமைப்பு----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தெரிவுக் குழுவில் இடம்பெறும் அங்கத்தவர்கள் விவரம் தொடர்பாக அடுத்த வாரம் செவ்வாயன்று இடம்பெறும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

13 ஆவது அரசமைப்புச் சட்டத்தின் எந்த ஒரு ஷரத்தையும் திருத்துவதற்கும் அகற்றுவதற்கும் உரிய முறையில் சிபார்சுகளை வழங்கக் கூடியதாக இந்தத் தெரிவுக்குழுவின் விதிகள் அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org